முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 13-4-56 வெள்ளி | ஒலி 2

மூன்றாவது ஆண்டு!

பொதிகைமலை போலிருந்தார்; பொலபொலவென உதிர்ந்தார்!

"தென் திசையைப் பார்க்கின்றேன்; என் சிந்தையெல்லாம் தோள்களெல்லாம் பூரிக்குது, அடடா!"

—என்று முன்னம் புரட்சிக் கவிஞர் பாடிய எழுச்சி வரிகள் அத்தனையும் இன்று புத்துயிர் பெற்றுக் காட்சியளிப்பதுபோல் தோன்றுகிறது, ஈழத்துத் தீவிலிருந்து கிளம்பும் தேர்தல் எதிரொலியைக் கேட்கும்போது!

யு. என். பி. — என்னும் பெயரில் கொத்தலவாலையைத் தலைவராகக் கொண்டிருந்த ஆளும் கட்சி நின்ற நெடுஞ்சுவர் சாய்வதைப்போல மடமடவென மண்ணில் வீழ்ந்து விட்டது!

"யாராவது தமிழ்மொழி ஆட்சி மொழியாக வேண்டுமென்று ஆதரிப்பார்களேயானால் அவர்களை நான் சிங்கள இனத்துத் துரோகியாக நினைப்பேன்"

—என்று சிங்கம்போல் கர்ஜனை எழுப்பியவர் இன்று இருக்குமிடந் தெரியாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டுவிட்டார்!

இறுமாப்புககாரருக்கு நீதி வழங்கிவிட்டார்கள, ஜனநாயகத் தராசைக் கையிலேந்தி யிருக்கும் ஓட்டர் பெருமக்கள்!

பதவித் தேனில் ஈக்களாய் நீச்சல் போட்டவர்கள் இன்று ஜில்லிட்ட பிரேதங்களாய் மிதக்கிறார்கள்!

கிடைத்துவிட்டது அதிகாரம்; இனிப் பகைவர்கள் பஸ்மீகரந் தான்!—எனப் பல்லிளித்துத் திரிபவர்கள் அனைவருக்கும் அதிர்வேட்டாய்—

பொதுமக்கள்தானே! புல்லர்கள்தானே! அவர்கள் தீர்ப்புக்கு நான் பணியவேண்டுமா?–என்று தலைதூக்கித் திரிந்த தான்தோன்றிப் பண்புக்காரர்களுக்கு அபாய அறிவிப்பாய்—

கொத்தலாவலை கட்சி தோற்றது! தோற்றது!! என பொதிகைத் தென்றல் புதுமணம் கமழும் செய்தியொன்றைத் தூக்கிய வண்ணம் நம் நெஞ்சைத் தடவிச் செல்கிறது!

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் செல்லப் பிள்ளை சுக்கு நூறுகி விட்டார்!

ஐசன் துரையும், அவரைச் சுற்றியுள்ள பிரபுக்களும் ஆணையிட்டபடி யெல்லாம் ஆடி வந்த 'சாணி'ப்பிள்ளையார் சமாதிக் குழியிலே தள்ளப்பட்டு விட்டார்!

—தென்னிலங்கை வாழ்வோர் துணிவு மிக்க செயலொன்றைச் சாதித்திருக்கின்றனர்!

பாண்டுங் பாராட்டிலே மனச்சாட்சியை அமெரிக்கச் சீமான்களிடம் அடகு வைத்து விட்டு, சூ-என்-லாயைப் பார்த்து நெருப்பு மொழிகளைக் கக்கியவர்-

ஆசியாவை ஜனநாயகம் வளரும் தொட்டிலாக மாற்ற வேண்டும் என்று கர்ஜனை புரிந்தவர்.

மறு நிமிடம் இலங்கை வந்ததுமே கோஷம் எழுப்பத துவங்கி விட்டார்;

'ஈழம் சிங்களவர்களுக்கு மட்டுமே!' என்று!

ஆசியாவை ஜனநாயகத்தின் தொட்டிலாக்குவாராம்.

ஆனல் இருபது லட்சம் தமிழர்களுக்கு ஓட்டுரிமை வழங்க மாட்டாராம்!

கம்யூனிசத்தை ஒரு மயக்கு வலைஏகாதிபத்ய அமைப்பு என்று ஒப்பிடுவாராம்.

ஆனல் எட்டு லட்சம் தமிழர்களை 'நாடற்றவர்கள்' என்ற பட்டியலிலே சேர்த்து, நாடாண்ட இனத்தை நாடோடிகள் என்று தீர்ப்பளிப்பாராம்!

—அந்த விந்தை மனிதர்தான் விசை ஒடிந்த தேகம்போல்வீழ்ந்து விட்டார்!

வாழ்வு மாயை - பரதேசிகள் பாடும் பழைய மொழி!

அதே ராகத்தில் ஏகாதிபத்திய வீடுகள் நோக்கி சரண்புகப் போகும் கொத்தலவாலை குழுவினர் பாடப்போவது;

'பதவி மாயை!'

'அதிகாரம் மாயை!'

—விருத்தம் யாடிக் கொண்டே வீதி வழியே அலைகின்றனர், மானத்தை அன்னியர்பால் அடகு வைத்துவிட்ட அடிமை மோகிகள் அற்ப அரசியல் சுகத்திற்காக விலைமதிக்கவொண்ணு சுதந்திரத்தைக் காவு கொடுத்த வன்கணளர்கள்!

கொத்தலவாலை பதவியிருந்த ஆசனத்திலே அமரப் போகும் வாய்ப்பு மக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்திருக்கிறது.

அதன் தலைவர் பண்டார நாயகா — ஆக்ஸ்போர்டு கலாசாலையிலே பயின்றவர்; கிருஸ்தவர்; இருந்தும் பெரும்பான்மையான பௌத்தர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்!

இவரே இலங்கைத் தீவின் அடுத்த பிரதமராக வரப் போகிறவர்;

இப்போதே அறிவித்து விட்டார் தமிழர் தம் அகம் குளிர்விக்கும் செய்தி யொன்றை!

'இலங்கையையும், இந்தியாவையும் பிளந்திருக்கும் 'தமிழர்கள் பிரச்சனை'க்கு நல்ல முடிவு காண்பேன்!'—என்பதாக!

ஆனல் ஒன்று; சிங்களம் மட்டும் அரசியல் மொழியாவதைத் தடுப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல! இது குறித்து அங்குள்ள தமிழர்தம் கொள்கை எவ்வகையில் எப்படி உருவாகப் போகிறதோ இன்னும் தெரியவில்லை!

ஆனல் பண்டார நாயகா, போர் வெறியை வெறுப்பவர்; போர் வெறி கொண்டலையும் அரசியல் வாதிகளையும் வெறுப்பவர்!

அவர் திட்டவட்டமாக அறிவித்து விட்டார், திரிகோண மலையில் ஆங்கிலேயரின் பிடியில் இருக்கும் கப்பற்படைத் தளத்தையும், ரெகாம்போவில் இருக்கும் விமானப்படைத் தளத்தையும் எங்கள் கட்சியின் ஆட்சிக் காலத்தில் காலி செய்யச்சொல்லி விடுவோம்—என்று!

இது ஏகாதிபத்திய வட்டாரத்தைக் கதிகலஙகச் செய்திருக்கிறது!

இலங்கைத் தீவைக் கொத்தடிமையாக்கி விட்ட கொத்தலவாலை போய்விட்டாரேஎன்று கண்ணீர் வடிக்கின்றன ஆங்கில அமெரிக்க ஏகாதிபத்தியங்கள்!

கவிழ்ந்தது கள்ளத் தன்மையின் உறைவிடம்! குலைந்தது குள்ளமதியின் பிறப்பிடம்!

பதவி சிரஞ்சீவி வரம் பெற்றது என்ற நினைப்பில், ஆகாயம் பார்த்து நடக்கும் ஆணவக்காரர்களே! தென் திசையைப் பாருங்கள்! நேற்று பொதிகை மலை போல இருந்தவர் இன்று பொலபொலவென உதிர்ந்து விட்டார்!

இதுதான் புல்லர்களுக்குப் பொது மக்கள் சக்திதரும் பாடம்; 1956-ம் ஆண்டுப் பதிப்பு!

★

★ இளமையிற் 'கல்'! ★

முறுக்கு மீசையும் முழுமதியன்ன தோற்றமும் கொண்டவன் அவன்!

இளமையின் துடிப்பு உடம்பின் அணு ஒவ்வொன்றிலும் நின்று சதிர் புரிந்தது!

கதிர் சாயப் பறந்துவரும் பசுங்கிளிபோல் அவனை மங்கையர் பலர் சூழ்ந்தனர்.

அவனும் வாளாவிருக்கவில்லை; சீமான் வீட்டுப் பிள்ளை; சொல்லவா வேண்டும்!

வேலைக்காரி ஒருவள்; வீழ்ந்துவிட்டாள் வாலிபன் விரித்த வலையில்!

பலநாள் இன்பம் கண்டனர். அதன் பலனும் அந்த வேலைக்காரியின் வயிற்றிலே வளர ஆரம்பித்துவிட்டது!

ஆமாம் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள்!

வெளிக்குத் தெரியாமலே இந்த விபரீதம் நடந்துவிட்டது!

நாட்கள் பல ஓடின; காமச் சேட்டைகள் பலவற்றின் கர்த்தாவாக இருந்த அந்த 'வாலிபன்' உண்மையிலேயே முறைப்படி மணம் செய்து கொண்டு, வெறெரு குழந்தைக்கும் தந்தையாகிவிட்டான்.

வீட்டு வாசலில் காற்று வாங்குவதற்காக அந்த 'மாஜி மைனர்' வந்து நிற்பான்!

அய்யோ! அந்தக் காட்சியை என்னென்பது? இவனுடைய மூத்த மகன் (வேலைக்காரிக்குப் பிறந்தவன்) தன்னுடைய சொந்த மனைவியின் மகனுக்கு வண்டியோட்டிச் செல்கிறுன்!

இளமையில் மனதைக் கல்லாக்கிக் கொண்டு காலங் கழித்த 'மைனர்' யார் தெரியுமா?

பிற்காலத்தில் பெரும் உபதேசங்கள் பல புரிந்து, காந்தி யாருக்கு ஆசான் — என்கிற அளவுக்குப் பெருமைபெற்ற **டால்ஸ்டாய்**தான்!

தலையங்கம்

ஆண்ட இனத்தால் மீண்டும் முற்றுகை;
மாண்டிடும் புழுவே மகுடம் கழற்று!

சென்னை 13--4--56 வெள்ளி

மூன்றாம் ஆண்டு!

முரசொலிக்கு மூன்றாவது ஆண்டு துவங்குகிறது. உள்ளங்கவர் வெல்லச் சொல் மழலையை உதிர்த்தவாறு இலட்சியத் தாழ்வாரத்தில் தளிர் நடைபோடும் கொள்கைக் குழந்தையாக முரசொலி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவதை நாடறியும். நல்லோர் அறிவர்.

கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து—இனிக் கடக்க வேண்டிய பாதையைக் கணக்கிட்டு—பழிகள் பல வரினும் வழி தவறாமல் ஒலித்துக் கொண்டிருக்கிறது முரசொலி!

தென்னகத்து விடுதலைப் போருக்குத் தேவையான தலை சிறந்த படைக் கலன்களிலே ஒன்றாக இருக்கும் பேறுபெற்றுள்ள முரசொலியின் தோற்றம் மிகமிக வியப்புக்குரியது! ஏறத்தாழ பதினான்கு ஆண்டுகட்கு முன்பு 'முரசொலி' திருவாரூரில் முழங்கத் துவங்கிற்று. ஏடாக அல்ல; இயக்கக் கொள்கைகளைப் பறை சாற்றும் துண்டுத் தாளாக! திங்களிரு முறை ஆயிரக் கணக்கான முரசொலி வெளியீடுகள் துண்டு அறிக்கைகள் போல் தயாராகும். அவை தமிழகமெங்கும் உள்ள சிற்றூர் பேரூர்களில் மக்களிடம் இனாமாக வழங்கப்படும். அச்சியற்றல்—தாள் விலை—ஆகிய செலவினங்களுக்கு இயக்க ஆர்வமுள்ள தனிப்பட்ட நண்பர்கள் அனுப்பும் சிறு சிறு தொகைகள் பயன்படுத்தப்பட்டன அப்போதெல்லாம் முரசொலி சென்னைக்கு வருமென்றோ—பல்லாயிரவர் விரும்பிப் படிக்கும் கிழமை இதழாக மிளிரும் என்றோ கனவு கூடக் கண்டதில்லை நான். இடையில் ஓராண்டு காலம் திருவாரூரில் இருந்து 'முரசொலி' கிழமைத் தாளாக வெளிவந்தது—1947—1948-ல்! அப்போது என் இல்லற ஒளி மறைந்தது—அதோடு முரசொலியும் மறைந்தது.

தூத்துக்குடி திராவிடக் கழக மாநாட்டிற்கு அண்ணா வரவில்லை என்பதற்காக... மாநாட்டிலே சிலர் அண்ணா அவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசினர். அந்தத் தாக்குதல் படலத்தை முரசொலி மட்டுமே வன்மையாகக் கண்டித்து முழக்கமிட்டது. அதன் காரணமாக அப்போதிருந்த தலைமையின் ஆதரவை முரசொலி இழந்தது. உண்மைக்குப் பரிந்து பேசுவது மாபெரும் குற்றமாகக் கருதப்பட்ட காலம் அது! அந்தக் காலத்திலும் முரசொலி தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு உண்மையின் பக்கமே நின்று உள்ள உறுதியைக் காட்டிக் கொண்டது அதற்கு முரசொலி பெற்ற பரிசு... அப்பப்பா... முரசொலி நின்று விடுவதற்கே அந்த நிகழ்ச்சியின் தொடர்ச்சியே காரணமாயிற்று!

துண்டுத் தாளாக வந்து—இடையிலே கிழமை ஏடாகிப் பின் துவண்டு—மீண்டும் இப்போது தூய்மைசேர் நற்கொள்கைகளுக்காகப் பணி புரியும் முரசொலி, மூன்றாவது ஆண்டு துவக்கத்திலே உங்கள் அனைவரின் உளமார்ந்த வாழ்த்துக்களையும் எதிர் பார்த்துக் கரங் குவித்து நிற்கிறது.

இரண்டு ஆண்டுகள்—நூற்றுக்கு மேற்பட்ட இலட்சிய இதழ்கள்! இரு பெரும் பொங்கல் மலர்கள்! இயக்கத்தின் வரலாற்றிலேயே இல்லாத புதுமையெனப் போற்றிப் பாராட்டினீர்கள் நீங்கள்—இரு மலரும் பொன் மலராய் இருக்கக் கண்டு!

ஏராளமான பிரதிகள் போகின்றன—நல்ல லாபகரமாக நடக்கிறது முரசொலி—என்று வாயாரக் கூறியவர்களுக்கும்—வயிறெரியக் கூறியவர்களுக்கும்—"ஆமாம் லாபமாகத்தான் இருக்கிறது!" என்று புன்னகையோடு பதிலுரைத்து அந்த லாபத்தையும் முரசொலி, தன் வளர்ச்சிக்காகவே பயன்படுத்திக் கொண்டு மேலும் மேலும் பொலிவு பெறுவதை வாசகர்கள் நன்கு அறிவர்.

பல்லாயிரக் கணக்கான பிரதிகள், லட்சோப லட்சம் பிரதிகள் என மாறிட வேண்டுமென விரும்புகிறோம். வெள்ளிப் பணம் குவிக்க அல்ல: கொள்கை முழக்கம் எங்கணும் பரவிட! குறிக் கோள்—திராவிடக் குடி மக்கள் அனைவருக்கும் புரிந்திட!

அந்த இலட்சிய வளர்ச்சிக்கான எல்லாவித அறிவுரைகளையும்—ஆக்க உரைகளையும்—அன்புரைகளையும்—முரசொலி உங்களிடமிருந்துதான் எதிர்பார்க்கிறது!

நீங்கள் வழங்கும் ஆக்கமும் ஊக்கமும்-எனது மூத்த அண்ணன் ஆண்டுக் கொரு முறை பொங்கலின்போது முரசொலிக்கு வழங்கிடும் இதய வாழ்த்தும்—முரசொலிக்குப் புதிய தெம்பை ஊட்டுவதோடு—இன்னும் உற்சாகமாக ஏடு ஒலித்திடத் துணையும் புரிகிறது!

ஒரு ஏட்டின் வளர்ச்சிக்கு வாசகர்கள்தான் இதயம் என்றால்—விற்பனையாளர்கள் வயிறு போன்றவர்கள் அன்றோ! வயிற்றிலே அடிக்கடி கோளாறு ஏற்படாமல் நாங்களும் கவனித்துக் கொள்கிறோம். அவர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். முன் எச்சரிக்கையாகவே கோளாறு வராது தடுத்திடும் விற்பனையாளர்களுக்கும்—வந்தபின் மருந்து அருந்திப் போக்கிக் கொள்ளும் விற்பனையாளர்களுக்கும்—முரசொலி, தன் நன்றியைத் தெரித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறது.

ஒருசில விற்பனையாளர்—ஒருசிலவாசகர்—இன்னும் பலதிறப் பட்டோரின் கணைகளைத் தாங்கிக்கொண்டு அலுவல் புரியும் முரசொலி அலுவலகத்தைப் பற்றி சில வார்த்தைகள்.........

அலுவலகம் பார்வைக்கு நமது குடியரசு ஆபீஸ் போலத்தான்! பணி புரியும் தோழர்களோ பாசத்திற்கு மதிப்பளிக்கும் பண்புடையாளர்கள்! அழுக்கில்லாதவர்கள்—உடையில் அல்ல; உள்ளத்தில்! முரசொலியைத் தங்கள் பத்திரிகையெனச் சொந்தங் கொண்டாடும் உண்மை நண்பர்கள்! தனித் தனியாகச் சொல்வானேன்; அத்தனையும் இலட்சியக் கனிகள்! அவர்களின் ஒத்துழைப்போடும்—நீங்கள் தரும் ஊக்கத்தோடும்—கொள்கையிலே இருக்கும் குன்றாத பற்றோடும்—தென்னகத்தின் வீதி தோறும் விடுதலை முழக்கம் செய்துவரும் முரசொலியின் மூன்றாவது ஆண்டு சிறப்பிதழ் உங்கள் கரங்களை அலங்கரிக்கிறது!

மேன்மை பொருந்திய உங்கள் கரங்களால் குழந்தையின் கன்னத்தை வருடுங்கள்! இதழ் குவித்து முத்தமாரி பொழியுங்கள்! உங்கள் செல்வக் குழந்தையை வாரியெடுத்து அணைத்து மகிழ்ந்து—எம் சிந்தை மணக்கச் செய்திடுங்கள்! "சின்ன மழலைக்கு சீவி முடித்து சென்று வா செரு முனை நோக்கி" என அனுப்பி வைத்தாளே புறநானூற்றுத் தாய்-அது போல முரசொலிக் குழந்தையின் கையிலே வாள் கொடுத்து "வாகைசூடி வருக!" என வாழ்த்தி வழி அனுப்புங்கள்!

தத்தி நடக்கும் இக் குழந்தைக்குத் தருக்கர்களின் தலையைக் கொத்தி வரும் சக்தி உண்டு! வேலெடுத்து வீசுகின்ற வீரம் உண்டு! நெஞ்சில் ஈரம் உண்டு! வாழ்த்துங்கள் நண்பர்களே வாழ்த்துங்கள்—வளைந்துபோன திருநாட்டை வாழ்விக்க வந்த படையிலோர் வீரனாக விளங்குகின்ற முரசொலியை வாழ்த்துங்கள்! அந்த வாழ்த்து முரசொலியை வளர்க்க—திராவிட மூதுரை நம் வசமாக்க உதவட்டும்!

வாழ்க திராவிடம்!
வெல்க தி. மு. கழகம்!!

மாணவர் முகாமிலிருந்து!

எத்தனையோ இன்னல்களுக்கு இடையில் இடையறாத உழைப்பின் மூலம், இளைஞர்களின் இதயங்களுக்கு இதமளித்து இன்பம் உண்டாக்கிய "முரசொலி" மூன்றாவது ஆண்டு எனக் கேட்டதும் பெருமிதம் அடைகிறோம்.

எதிர்காலம் என்ற சிலையை நிர்மாணிக்கும் சிற்பிகள் எங்களைப் போன்ற மாணவத் தோழர்கள். திருச்சியில் உள்ள பல்கலைக் கழக மாணவர்களின் சார்பாக இவ் வாழ்த்துரையை வழங்குகின்றோம். தென்னாட்டின் இலட்சிய ஏடே நீ வாழி வாழி! எனக் குரல் எழுப்புகிறார்கள் மாணவத் தோழர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

இங்ஙனம்,
ம. சி. இராமமூர்த்தி,
திருச்சி.

ஊருக்கு இரண்டு கொடி!

வீரம் கருகிவிட்டது; விவேகம் அவரிடமிருந்து 'விவாக'ரத்து பெற்றுவிட்டது! பதவியெனும் வித்தாரக்கள்ளியின் முத்த விருந்திலே சித்தத்தைப் பறிகொடுத்துவிட்டார்; தொட்டி நீரிலே உணர்ச்சியற்று மிதந்துகொண்டிருக்கும் மரப்பாச்சிபோல, சென்னைக் கொலுமண்டபத்திலே, ஏதோ பெயருக்கு ஆளாக இருக்கிறார்—என்று நாடு கொண்டிருந்த முடிவை – சுக்குநூறுக்கிவிட்டார்; நான் யாரென்று தெரியுமா?வாயை திறக்கமாட்டேன்! திறந்தால் மூடமாட்டேன்!' என்று கோடைமழையென பொழிந்து தள்ளியிருக்கிறார்.

ஏப்ரல் 9 சேலம் போஸ் மைதானத்தில் மாட்டக் காங்கிரஸ்கமிட்டியின் சார்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் இப்படி ஆரவார மெழுப்பியிருக்கிறார் சென்னை நகர் ஆட்டோ ரிக்ஷாக்களைப் போல!

"கம்யூனிஸ்டுகள்-சோஷலிஸ்டுகள் ஒன்றும் குற்றம் காணவில்லை; அயல்நாட்டுக் கொள்கை, அபிவிருத்தி வேலைகளில் ஒத்துழைக்கிறார்கள். திராவிடக் கழகம் நம்மூர் கட்சி, ஜனநாயக அடிப்படையில் அரசியல் போட்டிபோடும் கட்சியல்ல; அதிலிருந்து பிரிந்த தி. மு. கழகப் பேச்சுகளில் பதவிக்குப் போட்டிபோட உத்வேகம் காணப்படுகிறது. ஆனால் அதில் பேசக்கூடிய 5, 6 நபர்கள் தவிர வேறொன்றுமில்லை. ஊருக்கு இரண்டு கொடிகள்; அவ்வளவுதான்! ஜனநாயக நாடுகளில் காணக்கூடிய மாற்றுக் கட்சிகள் இங்கில்லை; வசை கூறலாம். மேடைகளில் பேசலாம், பத்திரிகைகளில் சில கார்ட்டூன் போடலாம்; ஆனால் காங்கிரஸ் பதவியை விட்டு விலகினால் அவர்கள் பொறுப்பேற்று அரசாங்கம் நடத்த முன்வரும் வாய்ப்பு கிடையாது. ஆகவே தி. மு. க. போன்றவை பொறுப்பில்லாமல் எதை வேண்டுமானாலும் கூறலாம்; அவர்களுக்கு பேசவும், எழுதவும் பூர்ணசுதந்திரம் அளித்துள்ளோம்! நாங்கள் கடவுள் அல்ல; தவறுகள் செய்யலாம்; எடுத்து கூறினால் திருத்திக் கொள்ளலாம், சினிமா நாடகங்கள் மூலம் எங்களையும் கடவுளையும் திட்டலாம்; நான் மௌனமாய் இருந்தால் 'கல் பிள்ளையார்' என்கிறார்கள்.

பேசினாலும் குறைகூறுகிறார்கள்; என்னைக் கோப மூட்டுகிறார்கள், நான் அவசியம் என்று கருதுகிற அளவிற்கு மௌனமாய் இருப்பேன்; நேரம் வந்தால் பேசியே தீருவேன், என்னிடம் 'வடக்கு முத்திரையோ. ஈரோட்டு முத்திரையோ' கிடையாது, நீங்கள் என்னைத் தமிழ் நாட்டைக் காட்டிக் கொடுத்தவன் என்று கூறினால் உங்கள் சாயத்தை வெளிப்படுத்துவேன். அன்று வெளிநாட்டு மன்னர்களின் தலையில் கல் சுமக்க வைத்த தமிழர் இன்று, ஏன் வட நாட்டைக் கண்டு பயப்பட வேண்டும்"

இப்படிப் பேசித் தள்ளி இருக்கிறார் நம் சாயத்தை வேறு வெளுத்து விடுவாராம்! ஏனோ? அவருக்கிந்த திருப்பணி!பரிதாபம்!

மந்தி மது குடித்து - அதைப் பொல்லாத தேள் ஒன்றும் தீண்டிவிட்டால், அது படும் வேதனையை தமிழ்ப்புலவர் ஒருவர் அழகு படத்தீட்டி யிருக்கும் காட்சிதான் நம் நினைவிற்கு வருகிறது; காமராசர் நம்மை நோக்கி வீசி யிருக்கும் 'சொத்தை'க் கணைகளைப் பார்க்கும்போது!

அவரா பேசி இருக்கிறார் இல்லை இல்லை!

பதவி மது! அதிகாரத் தேள்!

இரண்டும் அவரை அப்படிப் பேச வைத்திருக்கிறது; அதிலொன்றும் ஆச்சரியமில்லை; ஆனால் தமிழர்களின் வீரத்தைப் பற்றியும் ஜனநாயகத்தைப் பற்றியும் காமராசரா பேசுவது என்பதை நினைக்கும்போதுதான் நமக்கு கவலை ஏற்படுகிறது!

தி. மு. க. வின் பேச்சுக்களில் பதவிக்குப் போட்டி போடும் உத்வேகம் காணப்படுகிறதாம்!

'பதவி' என்ன தெய்வீகக் குளத்துப் 'பொற்றாமரையா? தி. மு. க. வைக் கண்டதும் விலகிக் கொள்ள!

அல்லது காமராசர்களுக்கு மட்டுமே ஏக போக உரிமையா?

பிறகு ஏன் காமராசருக்கு தி. மு. க. வின் பேச்சு, 'மலேரியா' காய்ச்சலை உண்டாக்கி வருகிறதோ தெரியவில்லை!

ஊருக்கு இரண்டு கொடி பறக்கிறதாம் நமக்கு! அது இவர் கண்ணை உறுத்தி யிருக்கிறது; நாம் வளர்ந்திருக்கிறோம் — ஊருக்கு இரண்டு கொடி பறக்கின்ற அளவிற்கு! அந்த வளர்ச்சியைப் பார்த்தும்கூட 'சிந்தாதிரிப்பேட்டை' பாணியிலே 5, 6 பேர் என்று பேசி யிருக்கிறார் விருதுநகர் வீரர்!

அந்த 'ஐந்தாறு' பேர் தான் காமராசரின் அடை பட்டுக் கிடந்த வாயை உடைத்து திறக்கும்படி செய்திருக்கிறார்கள் என்பதை மறந்து போய் ஆத்திரத்தைக் கொட்டி யிருக்கிறார்.

இன்று வட நாட்டுக்கு 'எடுபிடியாக' டெல்லி ஏகாதிபத்தியத்தின் சென்னைக் கிளைக்க 'ஏஜண்டாக' மாறியிருக்கும் இவர் "வட நாட்டு மன்னர்களின் தலையிலே கல்லேற்றிய தமிழர்கள் இன்று வட நாட்டுக்கு ஏன் பயப்பட வேண்டும்" என்று 'அபயம்' அளிக்கும் பாணியிலே பேசி யிருக்கிறார் அவர்.

யார் சொல்லிக் கேட்டாரோ சேரன் காதையை? செப்பி யிருக்கிறார் 'அச்சம் தவிர்!' என்று.

அச்சம்தான் காமராசரே! தமிழருக்க அச்சம்தான்! புன் முறுவல் பூத்து வரும் கள்ளியிடம் வனப்பு மிக்க வாலிபனுக்கு ஏற்படுமே 'ஒருவித அச்சம்!' அதைப் போன்ற அச்சம்தான் ஏற்படுகிறது வட நாட்டு மனிதர்களைப் பார்க்கும்போது;

வாளெடுத்து வாழ்வா? சாவா? என்று களம் நோக்கி வரும் வீரனைக் கண்டால் ஏற்படுமே கோழைகளுக்கு அதைப் போன்ற அச்சம் தமிழர்கள் அறியாதது! என்பதை காமராசருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம்.

வீரர்கள் பேச வேண்டிய சேரன் காதை பற்றி, இவர் ஏன் விவாதிக்க வேண்டும் பாவம்! தமிழர்களின் வீரம் வாழட்டும்! விருதுநகரார் அதைக் களங்கப்படுத்த வேண்டாம்!

'தமிழ்த் துரோகி; தமிழகத்தைக் காட்டிக் கொடுத்தவர்' என்று அவர் 'உலகப்' புகழுக்கு இழுக்கு தேடி கோபமூட்டுகிறோமாம்; நாம்!

தேவி குளம் – பீர்மேட்டைப் பறிகொடுத்து விட்டு 'தமிழகம்' என்ற பெயர் உலகமறியாதது என்று கூறிய ஒருவருக்கு அதை விடப் பொறுத்தமான வாசகங்கள் ஏதாவது கிடைத்தால், இல்லை இல்லை அவரே குறிப்பிட்டால், அன்றே அந்தப் பெயரை மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறோம் 'கனத்'திற்கு அந்தத் துணிவு இருக்கிறதா? எதிர்பார்க்க முடியுமா?

என் உடலில் 'வடநாட்டு முத்திரை'யோ 'ஈரோட்டுமுத்திரை'யோ இல்லை என்று கூறி 'ஞானஸ்தானம் பெற நினைக்கிறார்!

எந்த முத்திரை அவர் உடலில் இல்லையென்றாலும், 'வடக்கு முத்திரை' இல்லை யென்பதை, அவர் உள் மனமேகூட ஒப்புக்கொள்ளாதே!

'வடக்கு முத்திரை' இல்லை என்றால்; தேவிகுளம், பீர்மேடு ஏன் பறிபோகிறது!

பேசாமல் இருந்தால் 'கல் பிள்ளையார்' என்றும்; பேசினால் குறையும் கூறுகிறோமாம்!

இருந்தால் ஊமையாக இருப்பேன்; இல்லாவிட்டால் உளறுவேன்-என்ற கதையாகஇருந்தால், –காமராசர் என்ன; எந்த ராசரையும்தான் நாடு குறைகூறும், இதில் ஆச்சரியமென்ன இருக்கிறது?

குற்றங்களை எடுத்துச் சொன்னால் திருத்திக்கொள்வாராம்!

இதுவரை எதிர்க் கட்சிகள் எடுத்துச் சொன்ன குறைகளில் எதைத் திருத்திக்கொள்ள முன் வந்திருக்கிறது இவர் சர்க்கார்?

ஏன்? நாடே திரண்டெழுந்து சொல்லிற்றே – தேவிகுளம், பீர்மேடு பறிபோனபோது; "உரிமையை இழந்த பிறகாவது ராஜிநாமா செய்யுங்கள்; மான உணர்வைக் காட்டுங்கள் மந்திரிமாரே!"என்று அப்போது எங்கே போயிற்று இந்த விவேகம்! காமராசரிடம் இதற்கெல்லாம் நியாயமான பதிலை நாம் எதிர்பார்க்க முடியாதுதான்! என்றாலும் 'உயரத்திலிருப்பவர்கள் நிமிஷத்திற்கு நிமிஷம் நிறம் மாறும் பச்சோந்தி போல வேளைக்கொரு சொல்உதிர்க்கும் சந்தர்ப்பவாதக் 'கழுகு'களாக மாறிவரும் விபரீதத்தை நாம் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

★

★ **விற்பனையாளர்களுக்கு:**

தொடர்கதை ஆரம்ப இதழ் முதல் அதிகப்பிரதிகள் வேண்டும் விற்பனையாளர்கள், தேவையான முன்பணத்துடன் 16—4—56-க்குள் தெரிவித்து விடவும். முன்பணமின்றி அதிகப் பிரதிகள் அனுப்ப இயலாது.

—நிர்வாகி

என். வி. நடராசன்,
ஆசிரியர் 'திராவிடன்'

16-99 அம்மன் கோயில் தெரு
சென்னை-1

திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

வணக்கம். 15-4-1956 ஞாயிறு காலை 9 மணிக்கு, சென்னை வண்ணையம்பதி, தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில், எங்கள் குமாரத்தி செல்வி, ராணிக்கும், திரு. ஞாயிறு-ராசா அவர்களின் குமாரன் செல்வன், கலைச்செழியனுக்கும் திருமணம் நடைபெறும்.

அண்ணா அவர்கள் தலைமை வகித்து திருமணத்தை நடத்தி வைப்பார்கள். நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணவிழாவை சிறப்பிக்க வேண்டுகிறோம்.

என். வி. நடராசன்—புவனேசுவரி.

தேவை

எமது இதழ்களை விற்பனை செய்ய கீழ்க் கண்ட ஊர்களில் முன் பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் உடனே தேவை. விண்ணப்பிக்கவும்.

சென்னை சேலம்
திருச்சி கோவை
பெங்களூர் நாகை

"தமிழ்நாடு டைம்ஸ்"
(மாதம் இருமுறை)
ஆங்கிலம் தமிழ் இணைந்த
தி. மு. க. ஏடு,
187, மவுண்ட் ரோடு
த. பெ. எண் 399, சென்னை-2

அவன் செத்துக் கொண்டிருந்தான்.

சேற்றிலே சிக்கிக் கொண்ட வண்டிச் சக்கரத்தை உருட்ட முடியாமல் தவிக்கும் மாடுகளின் நிலையிலே மரணக் குழியிலே விழுந்து தவித்துக் கொண்டிருந்தான்!

சாவு — இவ்வளவு பயங்கரமானது எனத் தெரிந்திருந்தால் அவன் இந்தக் காரியத்திற்குத் துணிந்திருக்கவே மாட்டான்!

பாவம்; பெருமூச்சின் சப்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது! சப்த நாடிகள் என்பார்களே—அவை ஒடுங்கிக் கொண்டே வந்தன!

இருட்டிலும் நிலவு இருக்குமே! அதைப் போலத்தான் அந்த நினைவு —கண்களைக் குளமாக்கும் அந்த நினைவு...

—திரைப் படம் போல சுழல ஆரம்பித்தன அந்த சித்திரங்கள்!

ஆகாய விமானத்திலே ஏறிச் செல்வோர், உள்ளே செல்வதற்கு முன் வாயிலில் நின்று வழியனுப்ப வந்தோரைக் கடைசி முறையாகப் பார்த்துக் கொண்டு, கைகாட்டிச் செல்வதைப் போல, மரண வாசலிலே நின்று கொண்டிருக்கும் அவன் கடைசி முறையாக வாழ்க்கைப் பாதையில் சந்தித்தவர்களையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்தான்...

"அவள்... சே!சே!...வேண்டாம்; வேண்டவே வேண்டாம்! அந்த வித்தைக்காரியின் நினைப்பு இருக்கிற சில நிமிடங்களையும் கொள்ளையடித்துச் செல்ல வேண்டாம்.."

—இப்படி வாய்விட்டு அலறினன்; என்னசெய்வது? அந்த அழகுத் திருவுருவம் விகாரத் தோற்றம்கொண்டு அவன் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறதே!

தேன் நிலவு போன்ற முகம் தேவாங்கைப் போல பழிப்பு காட்டுகிறதே!...

குயிலுக்குக் குரல் கற்றுக் கொடுக்கும் கொவ்வை இதழாள் 'காட்டேறி'க் கூச்சல் கிளப்புகிருளே!...

இருந்தபோதும் அந்த நாள்... அந்த இரவு...அந்த மணித் துளி... ...கோடையில் குளிர் தருவைப் போல இந்தக் கொடுமைக் கெல்லாம் சாந்தி கொடுத்தது.

அந்த ஒரு நிமிஷத்தை உடலிலே உணர்ச்சிக் கட்டுகள் அடங்கும் வரை சிறை செய்து வைக்க முடியாதா?...

செல்லக் குழந்தையைக் கட்டிப் பிடித்துத் தூங்கும் தாயைப் போல அந்தக் கண நேரத்தை—அந்தக் கண நேரம் தந்த களிப்புக் கடலை அணை போட்டு அவன் ஆவி அணையும் வரையில் அடைத்து வைத்திருக்க முடியாதா?...

—எண்ணங்களுக்குச் சிறகு முளைத்தன! பந்தயக் குதிரையைப் போல பாயந்தோடினன் பல மாதங்களுக்குப் பின்னல்!

★

"லீலா! உன்னைத்தானே! அதோ பார்! கடிகாரத்தின் சின்ன முள்ளும், பெரிய முள்ளும் பன்னிரண்டாவது மணியிலே கூடியிருக்கின்றன. அதோ, மறுகணம் பெரிய முள் நகர்கிறது பார்! 'கடமை அழைக்கிறது காதலி!' — என்று கண்ணீர் மழை பொழிந்தபடி, கடைசி முத்தத்தைக் கொடுத்துவிட்டு, பிரிய மனமில்லாமல் பிரிகிறது பார்!.... பார்த்தாயா லீலா! அதைப் போலத்தான் என் நிலையும்!... இரண்டு ஆண்டுகள் — கண்களை மூடிக் கொண்டு சகித்துக்கொள். அதற்குள் என் ஆராய்ச்சி முடிந்துவிடும்.

"டைபாய்டு கிருமிகளைப் பற்றி உனக்குத்தான் தெரியுமே...சுலபத்தில் தன் தன்மையைக் காட்டாதே! அதனுல்தான் இரண்டு ஆண்டுகள் —என் சோதனைகளை முடித்துக் கொண்டு, விஞ்ஞான விற்பன்னனுக உன்னை மாலை சூட்டுகிறேன்!"

—லீலா பேசவில்லை; புன்னகையால் அவனைப் புலன் மாற்றிப் போட்டுவிட்டாள்!

மறுகணம்—அவன் தோளிலே அந்தத் தையல்!

"நான் எங்கிருக்கிறேன்?"

"இனபலோகத்தில்!"

"நீங்கள்?"

"நரகத்தில்"

"என்ன?"

"நீதான் இதழ்களை எடுத்துவிட்டாயே!"

இச்! இச்!! அட்டைகளின் தன்மை அவள் இதழ்களுக்கு எப்படித்தான் கிடைத்ததோ!

பசிகாரன் முன்னே அருசுவைப் படையல்; முடவன் முன்னே கொம்புத்தேன்—தனிச் சுவை இருக்குமே, அதில்! எனவேதான் மறக்கமுடியாத வேளையாக அதை வாழ்க்கை ஏட்டிலே பதிவு செய்துகொண்டான், சவுந்தர்!

பேனா ஓவியம்!...

(பக்கம்-9)

அந்தக் கன்னியின் சிரிப்பிலே அப்போதெல்லாம் அவனுக்குத்தெரியாது, சித்திரவதை செய்யும் வெடிகுண்டு தயாராகிறது என்பது!

நாட்கள் ஓடின. ஆய்வுக் கூடத்தில் இரவு பகலாக சவுந்தர் ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தான்.

இரவு மணி பன்னிரண்டு அடிக்கும். கடிகாரத்தின் முட்கள் காதல் கதை பேசிக் கொண்டிருப்பதைக் கற்பனைக் கண்களால் உற்றுப் பார்ப்பான். பாவம்! அந்தச் 'சீமான் பெரிய முள்' எந்த விஞ்ஞான சாலையிலே டைபாய்டு கிருமிகளைப் பற்றி மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கிறதோ தெரியவில்லை!...காதலிக்கு ஒரு மணி நேர தவணை சொல்லிவிட்டு, அவனைப்போல ஓடிப்போகிறது!

மேஜையைப் பார்ப்பான்; சக்தி வாய்ந்த டைபாய்டு கிருமிகள் காற்றுப் புகாத கண்ணுடி சீசாக்களில் அடைக்கப்பட்டிருக்கும்!

அதைப் போலத்தான் அவன் உள்ளத்திலே பெருக்கெடுத்தோடும் உணர்ச்சி அலைகளை, 'லீலா! லீலா!' —என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கும் முரட்டு எண்ணங்களை இரண்டு ஆண்டுகளுக்குக் கைது செய்து வைத்திருக்கிருன்!

லீலாவும் கெட்டிக்காரப் பெண்தான்! இரண்டு ஆண்டுகளுக்கு அவன் எண்ணங்களைத் திருப்பக் கூடாது—என்று கருதிக் கொண்டு ஒரு கடிதம் கூட எழுதுவது கிடையாது. ஏன்; சந்தித்தே பல மாதங்களாகி விட்டன.

இருக்கட்டும்; இருக்கட்டும்! கன்னங்களைப் புண்ணுக்கி அவளுக்குத் தண்டனைத் தருகிறேன்!— இப்படிப் பேசிக் கொண்டே பூதக் கண்ணுடியை டைபாய்டுக் கிருமிகள்பால் திருப்புவான்!

அய்யோ! அந்த நாள்...ஏன் வந்தது அந்தக் கிழமை?...நினைத்தாலே அவன் நெஞ்சு படபடவென அடித்துக் கொள்கிறது.

ஆருயிர்த் தோழியாள்— லீலா; அவள் பக்கத்திலே ஒரு ஆணுரும்!

"தெரிகிறதா சவுந்தர்; இவர்தான் என் கணவர்! அவரும் ஒரு டாக்டர் தான்; இப்போதுதான் இந்த ஊருக்கு மாற்றிக் கொண்டு வந்திருக்கிருர்!"

சவுந்தரின் நெஞ்சம் வெந்து சாம்பலாகுமென்று தெரிந்திருந்தும் லீலா இந்தச் சேதியை சாவதானமாகச் சொன்னுள்.

லீலாவுக்கு ஒரு கணவன்— அவன் அணைத்துமகிழ்ந்த ஆணிப் பொன் மேனிக்கு வேறொருவன் உடமைக்காரன்—

சுண்டெலியும் சிங்கமாகச் சீறுமே இந்தச் சேதி காதில் விழுந்தால்!

பூங்காவிலுள்ள நீரூற்றைப் போல அவன் உடலெல்லாம் வியர்வை நீரைப் பொழிந்து தள்ளியது!

ஏமாற்றி விட்டாள், எத்துக்காரி! என் உயிர் உங்கள் சொத்து—என்று சொன்னவள் மலையுச்சியிலிருந்து அவனை உருட்டி விட்டாள்!

சின்னு பின்னமாகிவிட்டது அவன் இதயத்திலே செதுக்கியிருந்த சித்திரம்!

அடுக்கு மல்லிப் பூவைப்போல அடுக்கடுக்காய் எழுப்பியிருந்த என் எண்ணங்களைப் பொசுக்கிவிட்டு, பசப்பு வார்த்தை பேசுகிருயே, பாவி! உன்னை விடக் கூடாது.

★தொடர்ச்சி 10-ம் பக்கம்

மலைக் கோட்டை

தென்னகத்தின் வளங்களும் — முறையான வரலாறுகளும் மட்டுமல்ல; சிங்காரச் சிற்றூர்கள் பலவற்றின் பெயர்களும் மறைந்துவிட்டிருக்கின்றன. கல்வெட்டுக் காலங்களில் இருந்து மறைந்துபோன ஊர்கள் எத்தனையோ! அவைகளில் ஒன்றுதான் குமட்டூர். ஓய்மா நாட்டில் உள்ள ஒரு சிற்றூர். **ஓய்மா நாடு—குமட்டூர்** பெயர்கள் இரண்டுமே கேள்விப் படாதவைபோல் தோன்றுகின்றன அல்லவா? என் செய்வது; தமிழகத்தின் பழம் பெருமைகளும், பகை வெருட்டித் தன்மானம் நிலைக்கவிட்ட தகைவுறு செயல்களும் — எங்கேயோ கேள்விப்பட்டதுபோலும் — கேள்விப்படாததுபோலும் ஆகிவிட்ட காரணத்தால்தான் கேளாக்காதமைச்சர்களும் — தமிழகம் என்பதைக் கேலிக்குரியதாக்கிப் பேசும் கெடுமதித் தலைவர்களும் உலவிக் கொண்டிருக்கிறார்கள். திண்டிவனம் வட்டாரத்தையும், மதுராந்தகம் வட்டாரத்துத் தெற்குப் பகுதியையும் இணைத்திருந்த இடமே ஓய்மா நாடு என அழைக்கப்பட்டதாம் சங்ககாலத்திலே! இடைக்காலப் பல்லவர் காலம் வரையிலே சிறப்புடன் இருந்திருக்கிறது ஓய்மா நாடு. அந்நாட்டிலே ஒரு ஊர்தான் குமட்டூர். திண்டிவனத்துக்கு மேற்கே **மூட்டூர்** என அழைக்கப்படும் ஊர்தான் குமட்டூர் என்பர் ஆராய்ச்சியாளர்!

குமட்டூர்க் கண்ணனார் கேள்விப்பட்டிருக்கிறீர்களா; தமிழ்ப் பெரும் புலவர்களிலே ஒருவர். பதிற்றுப் பத்து பாடிய கவிஞர் பெருமக்களில் இரண்டாம் பத்துக்குரியவர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் போற்றிப் பாடிப் பரிசில் பெற்றவர் உம்பற்காடு என்ற பகுதியில் ஐநூறு ஊர்களை!

தென்னகத்துக் கோட்டையொன்றின் சிறப்பை 'துயிலின் பாயல்' எனும் தலைப்பின்கீழ் அவர் புகழ்ந்திடும் விதம் நமது நரம்புகளைத் தடவி முறுக்கேற்றும் ஆற்றல் வாய்ந்ததாகும்

*"கோடுறழ்ந் தெடுத்த
கொடுங்கணிஞ்சி
நாடுகண்டன்ன கணைதுஞ்சு
விலங்கல்
துஞ்சு மரக்குழாந் துவன்றிப்
புனிற்றுமகள்
பூணு வையவி தூக்கிய
மதில....."*

மலையைவிட உயர்ச்சியும் வலிவும் பெற்று வளைந்து கிடக்கும் புறமதில், புற மதிலைக் கடந்து வரும் மாற்றாரைக் குறுக்கே மடக்கி நிறுத்தும் அம்புக் கட்டுகள் குவிந்த இடை மதில் எதிரிகளுக்குப் பெருந் தடையாக நிற்கும் கணைய மரங்கள்.

இள மகளிர் அரைத்துப் பூசிக் கொள்ளும் ஐயவி யென்னும் வெண் சிறு கடுகை நினைவுபடுத்தி, அப்பெயரிலே அமைந்த ஐயவித்துலா மரம் என்னும் படைப் பொறிகள். இத்தனை பாதுகாப்புக்கிடையே முற்றுகை நேரங்களில் உணவு, உடை, உறையுள் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பெற்றியால் அகன்றதோர் நாடு போன்ற பேரிடம்.

குமட்டூர் கண்ணனார் கவிதையிலே கட்டிக் காட்டும் கோட்டையல்ல இது! செந்தமிழ்க் காவலர்கள்—சேர சோழ பாண்டிய மன்னர்கள் வான் முட்ட எழுப்பிய அரண்களிலே ஒன்றுதான் இது!

அத்தகைய அரண்களிலே ஆனைகள் மோதுகின்றனவாம். அதைக் காட்சியாக்கிக் கேலி புரிந்து, அந்த ஆனைகளைச் சினங் கொள்ள வைக்கிறார் பாருங்கள்.

*"நல்லெழி னெடும் புதவு
முருக்கிக் கொல்லுபு
ஏனமாகிய நுனை முரி மருப்பின்
கடாஅம் வார்ந்து கடுஞ்சினம்
பொத்தி
மரங்கொன் மழ களிறு
முழங்கும்..........."*

வலிவு மிக்க வனப்புறு கோட்டைக் கதவுகளில் இளம் யானைகள் மோதுகின்றன, மோதிய வேகத்தில் அவைகளின் கொம்பு நுனிகள் முறிந்து போகின்றன. கொம்பு முறிந்த இளங் களிறுகள் இப்போது பன்றியைப் போல் காட்சி தருகின்றனவாம். கதவைப் பிளக்க இயலாத கோபத்தில் அந்தக் கொம்பிழந்த களிறுகள் ஆங்குள்ள ஏனைய மரங்களைச் சாய்க்கின்றனவாம்

குமட்டூரார் கோட்டையின் சிறப்பைச் சொன்னதோடு நிற்காமல் அந்தக் கோட்டைக் கதவுகளில் மோதிக் கொம்பிழந்த களிறுகளையும் பன்றிகளோடு ஒப்பிட்டுக் கேலி புரிகிறார்.

கோட்டையில் மோதிக் கொம்பிழந்த ஆனைகள் பன்றிகள்போல உருப் பெற்றன குமட்டூராரின் கண்களுக்கு!

குமட்டூரார் காட்டுவது பழைய காலத்துக் கோட்டை.

இதோ: நாம் கட்டியிருக்கும் கோட்டை; கண்ணனார் பாடியிருப்பது போல கணைய மரங்களோ — ஐயவித் துலாமோ அம்புக் கட்டுகளோ — அக மதில் — புற மதில்களோ கொண்டதல்ல! நீண்ட நெடும் எழிற்கதவு கிடையாது இந்தக் கோட்டைக்கு! இவை யொன்றும் இல்லாததற்குக் கோட்டை யெனப் பெயரோ எனக் கேட்கிறீர்கள், சிரித்துக் கொண்டே! அது காதில் விழாமலில்லை. கணைய மரமும் ஐயவித் துலாமும் இல்லா திருக்கலாம். கடமை, கண்ணியம்; கட்டுப்பாடு எனும் ஆற்றல் மிக்கப் போர்ப் பொறிகள் உண்டு—மாற்றார் புகுந்திடில் மலையென நின்று தடுத்திடும் இடை மதில் உண்டு. ஆனால் அதற்குப் பெயர்தான் வேறு. சுயமரியாதை நெடுஞ்சுவர் என்போம் அதனை! உள்ளே அகன்ற நகர் அனைய இடமுண்டோ என்பீர்! குமட்டூரார் கோட்டையிலே திராவிட நகர்களில் ஒன்றுண்டு. நமது கொள்கைக் கோட்டையிலோ நகருக்கு பதில் நாடுண்டு! ஆம் நாட்டின் 'மாதிரி' உண்டு! திராவிட நாடு எப்படியிருக்கும் என்பதை அறிவிக்கும் 'மாதிரி' அது!

அம்புக் கட்டும் எந்திரப் பொறிகளும் தேவையன்றோ? கேட்கிறீர்கள் புரிகிறது! அதோ காணீர் எமது எந்திரப் பொறியை! பெயர்தான் வேறு; பொதுக்குழு! இயங்கிக் கொண்டே யிருக்கும் அந்த எந்திரத்திலே இணைக்கப்பட்ட அம்புகள்தான்......கழகக் காளையர், இரண்டு லட்சத்தை எட்டிப்பிடிக்குப் தொகையினர்!

இப்போது புரிகிறதா நமது கோட்டையின் லட்சணம் - வலிவு - வனப்பு எல்லாமே!

இந்தக் கோட்டையை நாம் கட்டிமுடிக்க எடுத்துக்கொண்ட சிரமம் சாதாரணமல்ல. கட்டபொம்மன் ஊமைத்துரை கோட்டைபோல வெல்லத்தால் கட்டப்பட்டதல்ல. கண்ணீர் வெள்ளத்திலே கடமைச் சேறு குழைத்தோம். செந்நீரையும் எலும்புத் துகள்களையும் பிசைந்து தூண் எழுப்பினோம். அடக்குமுறைக்குப் பலியான கழகச் செல்வங்களின் ஒடிந்துபோன கை, கால்களால் கூரைக்கு வாரை மரம் போட்டோம்; அந்தக் கோட்டைதான் அதோ விண்முட்ட எழுந்துநின்று வீரப்பண் பாடிவரும் தோழர்களை விடுதலைபுரிப் பயணத்திற்குத் தயார்படுத்தும் பாசறையாக விளங்குகிறது.

பதிற்றுப்பத்துக் கோட்டையிலே மட்டும் ஆனைகள் மோதிக் கொம்பிழக்கவில்லை. இதோ நமது கோட்டையிலே மோதிக் கொம்பிழந்து பன்றியெனக் காட்சி தரும் மதங்கொண்ட களிறுகள் ஏராளம்!

"ஏனம் ஆகிய" என்கிறார் கண்ணனார்.

அதுவும் எப்படி? "நுனிமுரி மருப்பின்" என்கிறார். கொம்பு நுனி முறிந்துவிட்டதால், ஏனம் ஆகிய என்கிறார். "ஏனம் ஆகிய" என்றால் "பன்றியைப் போலத் தோன்றுகிற" என்று பொருள்!

இலட்சியபுரிப் பயணம் நடத்த விரும்புவோருக்கு இருப்பிடமாகி விட்ட நமது இரும்புக கோட்டையில் மோதி ஊனமாகி ஏனமாகியோர்—இதோ நமது கண்களுக்குத் தெரிகிறார்கள்.

பலமிக்க கோட்டையில் மோதி பன்றியாகி விட்டார்கள் என்னும் போது சொல்லிலே சிறிது கடுமை தோன்றுகிறது; கொஞ்சம் இனிமையும் எளனமும் தோன்றுமாறு —ஏனமாகிவிட்டார்கள் என்றே கூறுவோம்.

நமது கோட்டையிலே எதிரிகள் நடத்தியிருக்கிற தாக்குதல் எவ்வளவு? கோட்டைக் கதவைப் பிளந்தெரிய எடுத்துக். கொள்ளப் பட்ட முயற்சிகள் எவ்வளவு!

கங்காணிகள்!
துரோகிகள்!
கண்ணீர்த் துளிகள்!
நாத்திகர்—!
நாட்டுவெறி பிடித்தவர்!
நாத்தழும்பு கொண்டவர்!
மொழி வெறியாளர்!
குறுகியநோக்கங்கொண்டோர்!
பாரதத்தாயைப் பிளப்போர்!
கோயில்களை இடிப்போர்!
குளங்களைத் தூர்ப்போர்!
கலை உணராக் கயவர்!
கம்பனைக் காய்வோர்!

நமது கோட்டைச் சுவர்களின் மீது வீசப்பட்டு முனை தேய்ந்து போன கணைகள் இவைகள்.

அடக்குமுறை
சிறைச்சாலை
சித்ரவதை
கண்ணீர்ப்புகை
தடியடி
துப்பாக்கிப் பிரயோகம்
சதிவழக்கு
கொலைவெறி

நமது கோட்டையின் இடை மதில் வரையிலே பாய்ந்துவந்த பயங்கரமான படை வரிசை யிது!

சீமான்
ஜமீன்தார்
மிட்டா
மிராசு
தேசீயவாதி
சந்துமுனை சிந்து பாடி
மதவாதி
மடாதிபதி
முட்டாள்
முரடன்
போலிப் பொதுநலவாதி
கொள்கை விற்றேன்
குடி பல கெடுத்தோன்
குத்திக் காட்டுவோன்
குடும்பம் அழிப்போன்

இவர்கள் எல்லாம் கோட்டையின் எழில் நீளக் கதவில் மோதி ஏனமாகிய இழிதகையாளர். இன்னோரன்ன பெரும் எதிர்ப்புகளுக்கும்—எதிரிகளின் பலம் வாய்ந்த முற்றுகைகளுக்கும் அசையாது நிற்கும் நமது கோட்டை மாற்றார் மருளும் **மலைக் கோட்டை!** ஈடேறும் மனக் கோட்டை! மாவீரர் பாதுகாத்து நிற்கும் கொள்கைக் கோட்டை! அந்தக் கோட்டைதான் அழைக்கிறது; கொள்கை முரசம் தட்டியவாறு-கொடியின் பட்டொளியைப் பரப்பியவாறு—வாரீர்! வாரீர்! விடுதலைப் படையினரே! வீணரின் முற்றுகைகளைத் தகர்த்தெறிந்து புதிய திராவிடம் காண்போம் வாரீர்! வாரீர்! என அழைத்திடுகின்றது

குமட்டூர் கண்ணனார் கோட்டையைப் புகழ்ந்துவிட்டு, பாசறையிலேயிருக்கும் காவலனை வீட்டுக்கு அழைக்கிறார். "போர் போர் என்று நீண்ட காலத்தைப் போர்க் களத்திலே கழித்துவிட்ட மன்னவனே! ஆறிய கற்புடையவள் உன் துணைவி!" என்று தேவியின் பெருமையைக் கூறத் துவங்குகிறார்.

நினைவில் கவனமாக வைத்துக் கொள்ளுங்கள்; ஆறிய கற்புடையாள்! ஆமாம் - ஆறிய கற்பு! ஆரிய கற்பல்ல! அது இடையினம்! ஆமாம்; இடை வளைத்து அபலாடவரை வளைக்கும் இடையினம்! ஆறிய கற்போ—வல்லினம்! வல்லமை பொருந்திய திராவிட இனம்! ஆறிய கற்பு, அறக் கற்பு எனப்பொருள் தரும்.

அத்தகைய அறக் கற்புடையவளும், அடக்கம் பொருந்தியவளும், மென்மையானவளும், ஊடற் காலத்திலே கூட இனிய மொழிகளே பகர்ந்து, இனமுறுவல் காட்டுபவளும், அமுதம் நிரம்பிய சிவந்த வாயுடையவளும் சுடர் நுதலும், சுந்தரக் கணகளுடையவளுமான அசை நடை அழகியாம் தேவி, மன்னனைக் காணாது நினைந்து நினைந்து வருந்துகிறாள் — அவளை விரைந்து சென்று அடைவாயாக!

*"ஆறிய கற்பின் அடங்கிய சாயல்
ஊடினு மினிய கூறுமின்னகை
அமிர்து பொதி துவர்வா
யமர்த்த நோக்கிற்
சுடர்நுதலசை நடையுள்ளலு
முரியள்...."*

சேரனைக் களத்திலே யிருந்து அழைக்கிறார்; புலவர், வேறொரு களங் காணச் செல்லுமாறு!

அந்தக் களத்திலே வேல்—விழியிலே இருக்கும்! வில்—புருவத்திலே காணப்படும்! குருதி — கொவ்வை இதழிலே நிறங்காட்டும்—முல்லையும்; மல்லிகையும் பரப்பிய களம். மோகக் கணைகள் தாபச் சரங்கள், மாறி மாறி, மாரி போலப் பொழியும் களம். அந்தக் களத்திற்கு அழைப்பு விடுக்கிறார் புலவர், புரவலனுக்கு! ஒரு களத்திலேயிருந்து மற்றொரு களத்திற்கு அழைப்பு. கண்ணனார் விடுக்கும் அழைப்புக்கும் கழகச் சார்பில் நாம் விடுக்கும் அழைப்புக்கும் அதிக வேறுபாடு உண்டு!

வாளும், வாளியும் பாய்ந்து பறக்கும் போர்க் களத்திலேயிருந்து புலி வேந்தை போகக் களத்திற்கு அழைக்கிறார் அவர்! புயலிலே இருந்து தென்றலுக்கு! நாமோ—இன்பக் களத்திலிருப்போரை இலட்சியக் களத்திற்கு அழைத்திடுகிறோம். இளவேனிற் சுவையை ஒத்தி வைத்து விட்டு தியாகத் தீக்குண்டத்தை வலம் வருவோம் வாரீர் என அழைத்திடுகின்றோம்.

சேனைதனைப் பிரிந்து ஆனைதனை விட்டிறங்கி சிங்கார மாளிகைக்கு வந்திடுக. சேவல் காணப் பேடைக்கு சிந்தை மகிழ்வு தந்திடுக!

இது கவிஞரின் அழைப்பு!

செந்தமிழே! சிந்தைக்கு அமுதே! சிந்தாத கண்ணீரை ஏன் சிந்தி எனைச் சித்ரவதை செய்கின்றாய். செருமுனை சென்று வர விடை கொடு! வெற்றியோடு திரும்புகிறேன். விட்டுப் போன முத்தங்களை மொத்தமாக அளிக்கிறேன் என ஆறுதல் உரைத்து அழகு பருகும் களம் பிரிந்து அறப்போர் விளைத்துநாடு மீட்கும் களம் புகுக!

இது கழக மாளிகையின் அழைப்பு! இந்த அழைப்புக்கு மதிப்பளிப்போர் அணி அணியாகத் திரண்டு நிற்கும் காட்சியை நாம் காண்கிறோம். களி பேருவகை கொள்கிறோம். திரண்டு நிற்கும் அணிக்கு திறமை மிக்க தலைவர் உண்டு! தென்னகத்தின் எதிர்காலம் என்ன வென்று அறியக்கூடிய அறிவுடை நம்பி, அண்ணாவின் தம்பி, அவரை நம்பி ஆயிரமாயிரம் படை—அனுமதி எப்போது தடை இடர எனக் கேட்டவாறு!

திறன்மிக்க தலைவர்-திண்மை மிக்க படை—திட்டம் வேண்டாமோ; களம் புக! காரியமாற்ற! எதிரிகளின் முற்றுகையையும் கடந்து இலட்சிய புரிப் பயணத்தைத் தொடங்க வேண்டிய நிலையிலுள்ளோர். ஏனமாகினர் எதிரிகள் எனினும், மதம் பிடித்து மரமழிக்கும் களிறு போல் பிளிறி நிற்கின்றனர் கோட்டைக்கு வெளியே என்பதை மறந்திடலாகாதே!

அவர்களை—அவர்தம் படைகளைச் சிதைத்து — அறப்போர்க் கொடி பிடித்தவாறு-கோட்டைக்குள் 'மாதிரி'க்கு அமைந்திருக்கும் திராவிட தேசத்தைக் காண்பதற்கான இலட்சிய யாத்திரை தொடங்கிடல் வேண்டாமா? அதற்குத் தகுதி வாய்ந்த திட்டங்கள் தீர்மானங்கள் தேவையல்லவா? அவைகளைத் தீட்டித் தர அரிய யோசனைகள் வழங்கப்பட வேண்டாமா? அதற்குத்தான் மலைக் கோட்டை அழைக்கிறது, மாநிலத்து மாவீரர்களை!

மாநில மாநாடு, திருச்சியிலே என்றதும்—மலைக் கோட்டையின் உச்சியிலே இருக்கும்—உச்சிப் பிள்ளையார் அல்ல; பச்சை விளக்குத்தான் மனக் கண் முன் தெரிகிறது. மாநாடு நடத்துவதற்காக தேர்ந்தெடுத்துள்ள இடம்; பெரிய தோர் மைதானம். பழைய பந்தய மைதானம். அங்கிருந்து திருச்சி தெரியவில்லை. மலைக் கோட்டைதான் தெரிகிறது. இருட்டிலே கோட்டையின் மேலுள்ள உச்சிப் பிள்ளையார் கோயில் தெரியாது! பச்சை விளக்குத்தான் தெரியும்,

"வெளியிலே அபாயம் எதுவுமில்லை. எதிர்த்து முற்றுகையிட்டவர்கள், ஏனமாகி ஓடி விட்டார்கள். பகையில்லை, பகையின் படையில்லை, இருப்பினும் அதற்குப் பலமில்லை. இதுதான் நேரம். பச்சை விளக்கு போடப் பட்டிருக்கிறது—மலைக்கோட்டை பச்சை விளக்கு, மாவீரர் கோட்டைக்கு மகிழ்ச்சி விளக்கை ஏற்றி வைக்கும் நான்கு நாட்கள்; மே, 17, 18 19, 20 தினந்தோறும் அந்தப் பச்சை விளக்கு நம் கண்ணுக்குத் தெரியும். நமது பாதையிலே பயமில்லை என்ற அச்சமகற்றும் அறவுரைகள் ஒளி மிக ஊட்டும். வாரீர்! வாரீர்!" என்று கழகம் அழைக்கிறது களம்புகும் வீரர்களை!

குமட்டூர் கண்ணனார் சேரலாதமன்னனை போர்க் களத்திலிருந்து அழைக்கிறார், நாமோ சேரன் பரம்பரையை போர்க்களத்திற்கு அழைக்கும் கட்டத்திலிருக்கிறோம்.

"கோட்டை விட்டுக் கோமளவல்லியிடம் வருக" என்கிறார் குமட்டூரார்!

நாமோ; கோமளத்தைப் பிரிந்து கோட்டையைக் காத்திட வருக!" என அழைக்கிறோம்,

மாவீரா! மறத் தமிழா! மாநிலம் புகழும் தென்னவனே! உன் அன்னையின் நாடு அலங்கோலப் படுத்தப் பட்டிருக்கிறது பார்! அதை மீட்கப் புறப்படு! எழுந்து நில்! அண்ணாந்து பார்! மலைக்கோட்டை தெரிகிறது—உச்சியிலே பச்சை விளக்கு உன்னை அழைக்கிறது: ஊர் மீட்க என்று நீ அறிந்து கொள்! ஆண்டவன் கோயில் விளக்கல்ல அது! தரணி ஆண்டவர்களுகுத் தைரிய மூட்டும் விளக்கு! அந்த விளக்கிடம் வா! அது உன்னை விடுதலைக் கோட்டைக்குள் அனுப்பும்!

போர் முடிந்த பிறகு போகலாம் சோலைக்கு, சுந்தரியின் மடிக்கு! குமட்டூர் புலவர் உன்னை அழைக்கவில்லை; அந்த நாள் கோட்டையையும் அதில் மோதி ஏனமாகிடும் இளம் யானைகளையும் மட்டுமே உனக்குக் காட்டினார்.

இப்போது கொள்கைக் கோட்டையாம் மலைக் கோட்டை உன்னை அழைக்கிறது! இங்கே வீரர்களுக்கு மட்டுமல்ல; வீராங்கனைகளுக்கும் இடமுண்டு! விடுதலை விரும்பும் அனைவருக்கும் இடமுண்டு!

வா! வா! வந்திடு! திராவிடத்திற்கு உன் பங்கைத் தந்திடு!

மே-17-18-19-20 நினைவில் வைத்துக் கொள்! இந்த நாட்டு விடுதலைக்கு நமது படையைத் தயார் செய்யும் நல்ல நாட்கள் அவைதான்! மறந்து விடாதே! மறந்து விடாதே!

★

ராஜாஜி பெரிய மாகாணம் (தட்சிணப் பிரதேசம்) வேண்டுமென்று பேசியிருக்கிறார். அது எப்படி உத்தரபிரதேசத்தைவிட பெரியதாக அமைய முடியும்? அவர்கள்தான் 'குத்தி'விடக் காத்திருக்கிறார்களே!

(கார்ட்டூன்: 'சங்கர்ஸ் வீக்லி'

பூவண்ணம் மயக்குது! ★ ★
★ ★ பொன்வண்டு பறக்குது!

கோவ்வை வாய்ச்சியின் குளிச்சிக்காக கொச்சை பேசும் பச்சைநிறக் கிளியே! நீ கூண்டிலே அடைபட்டுக் கிட, கோல விழியாளின் மனமகிழ்ச்சிக்காக துள்ளித் திரியும் புள்ளிமானே! நீ இந்த முள் வேலிக்குள் முடங்கி இரு — என்று கூறுவதற்கும், பாரதமாதாவின முகம் கோணுமல் இருப்பதற்காக, எழில்மிக்க திராவிட அணங்கே! நீ என்றென்றும் அவள் பாதங்களை நத்திக் கிட, 'ஏ க இ ந் தி ய ா' என்ற அமைப்பின் பெயரால், அவள் கட்டளைக்கு — கைகட்டி நிற்கும் சேடியைப்போல் கா த் து க் கி ட, எனறு தேசியத்தார்கள் கூப்பாடு போடுவதற்கும் அதிக வித்தியாசம் இருக்க முடியாது.

அன்றும் இப்படித்தான், கைராட்டைக்கு சமமாக பச்சைப் பிறை கொடியை வானமண்டலத்திலே முஸ்லீம்லீக் உயர்த்தி விட்டபோது—

'ஆகா! ஆகுமா இந்த தீய நினைபபு — அடுககுமா இ ந த அநீதி: என்று காங்கிரஸ் வட்டாரத்தின் 'தலையிலே' இருந்து, இஙகிருக்கும் 'தண்டல்'காரர்கள் வரை உறுமினர்; உரத்தக் குரல் எழுப்பினா!

நேரு பண்டிதர் ஒரு படி அதிகமாகவே சென்று

'என் பிணத்தின்மேல் ஏறி நின்றுதான் பாகிஸ்தானைப் பிரிக்கவேணடும்'-என்று மிரட்டினுர்.

இதைக் கேட்ட ஜின்ஞ, 'அவசரமமிககு அரசியல் குழந்தை அப்படித்தான பேசும்' — என்று அலட்சியமாகக் கூறிவிட்டு, அவர் பாதையில் சென்றுகொண்டிருந்தார; வி டு த லை க் கொடியை உயர்த்திய பிறகே அவர் ஓய்ந்தார். பாகிஸ்தான் பிரிவினைக் கீதம், தே சீ ய வட்டாரத்திலே அதிர்ச்சி அலைகளை எழுப்பிக் கொணடிருந்தபோது, இறுமாப்பு மிக்க சில தேசீயத் தலைவர்கள்; 'பாகிஸ்தான் பிரச்சனை எனக்குப் புரியவில்லை; அதை நான் புரிந்து கொள்ளவும் விரும்பவில்லை'— எனறு செருக்கு மொழிகளை எடுதது வீசினர்.

காலக்குறி கண்டும் தெளிவு பெருத அந்தத் தலைகனம் மிக்கோா, 'பிரசசனை புரியவில்லை!' என்று சொல்லிக் கொண்டிருந்த பொழுதே பாகிஸ்தான் சுதந்திர பேரிகை தட்டிவிட்டது! ஏக இந்தியா என்ற மயக்கு வாதத்தைக் காரி உமிழ்ந்துவிட்டு தமககென ஓர் கொற்றம் கண்டனர்.

பாகிஸ்தான் பிரச்சனையே புரியவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்த குணுளர்களுக்கு பாகிஸ்தான பிரிந்துவிட்டதும் 'புரியாமலேயே' போய்விட்டது பாவம்!

ஒரு பிரச்சனை — உண்மையிலேயே புரியவில்லை என்பது கண்யம்!

புரிந்தும் புரியாமல் காட்டிக் கொள்வது—கயமை!

புரிந்து கொள்ளவே விரும்பவில்லை என்று திமிர்வாதம் பேசுவது காட்டுத்தனம் !

இந்த ரகத்தில் — மூன்ரும் வரிசையிலே நிற்கும் நிதியமைச்சர், கோவை துரை மகனுர்; 'திராவிடநாடு பிரச்னையை நான் புரிந்து கொள்ள விரும்பவில்லை ; அது அவசியமும் இல்லை ' என்று சட்ட சபையிலே சில தினங்களுக்கு முன் பேசி யிருக்கிருர்.

ஏதோ திராவிடநாடு பிரச்னையை இவர் புரிந்து கொள்ள விரும்பாததால்—நாட்டின் கவனமே இவர் பக்கம் திரும்பிவிடும் என்று கருதிக் கொண்டாரோ என்னவோ! நமக்குத் தெரியாது! பூனையின் கண்ணுக்குள் அடங்கியிருக்க வில்லையே பூலோகம்!

திராவிடநாடு பிரச்னையை, சுப்பிரமணியனுர் ஒப்புக் கொள்ள வில்லையே—என்று நாடு கவலைப் படுகிற அளவிற்கு அப்படித் தான் இவரென்ன அவ்வளவு 'பெரிய' அரசியல் மேதையோ நாமறியோம் !

தேவிகுளம்—பீ ர் மே ட் டை கோட்டைவிட்ட இந்தக் கையாலாகாத மனிதரிடமா—திராவிட இயக்கம் ஆதரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது, இல்லை, இல்லை !

அவர் புரிந்து கொண்டாலும், புரிந்து கொள்ள விரும்பா விட்டாலும், பொது மக்கள் புரிந்து கொண்டிருக்கிருர்கள் 'திராவிட நாடு' பிரச்சனையை.

இப்படி நாட்டிலே செல்வாக்கு பெற்றுவரும் அரசியல் பிரச்னைகளை, அலட்சியப் படுத்துவதால் அதன் விளைவு எதுவாக இருக்க முடியும் என்பதை சுதந்திரம் பெற்ற நாடுகளின் சுவடிகளைப் புரட்டிப் பார்க்கும் யாருமே புரிந்து கொள்ள முடிகிறது.

தாயகத்தின் விடுதலைக்காக தியாகத் தீயிலே குளிப்போர் தணல் ஒடைகளைத் தாவிக் கடப்போர். 'பிரசசனை' எதிர் முகாமிலே இருக்கும் இறுமாப்பாளர்களுக்கு புரிந்ததா ? இல்லையா? எனறு பார்த்துக் கொண்டிருந்ததாகத தெரியவில்லை !

இந்த உண்மையைப் புரிந்து கொண்ட கவர்னர் பெருமான், சென்னைப் பல்கலை ஆராய்ச்சி மாணவர் சங்கத்தின் ஆண்டு விழாவிலே பேசும்போது சுப்பிரமணியம் போன்ற செருக்கு மிக்கோருக்கு சூடு கொடுப்பதுபோல பேசி யிருக்கிருர். பிரச்சனைகளை புரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதாக.

நினைவிலிருக்கட்டும்! கவர்னர் பேசி இருப்பது, ஆராய்ச்சி மாணவர்களிடத்தில் !

எனவேதான் அவர் வாக்கிலே உண்மை தொனிக்கிறது.

விரும்பியோ — விரும்பாமலோ அவர் அந்தக் கருத்தை வெளியிட வேண்டிய சூழ் நிலைக்கு ஆளாகி இருக்கிருர்.

கலை பயிலும் மாணவர்கள் அவர்கள் ! அங்கே புராணக் கடையை விரிக்க முடியாது !

நாட்டின் நிலை உணர்ந்தவர்கள் எனவே அவர்களிடம் 'மாயாவாதம்' பேச முடியவில்லை! அதனுல்தான 'ஆராய்ச்சி அவசியம்' என்று வற்புறுத்தி இருக்கிருர் கிண்டி வாழ் கோமான் !

''முஸ்லிம் லீகின் செல்வாக்கு ஆரம்ப காலத்தில் ரொம்ப அற்ப சொற்பமே ! என்ருலும் தேசப் பிரிவினை எனும் பெரிய தொரு சோகக் கதைக்கு அதுவே காரணமாய் இருந்தது. இன்று ஆரியர்கள் எனறும் திராவிடர்கள் என்றும் மககளைப் பிளவு படுத்தும் சகதிகளை அர்த்தமற்றவை எனறு நாம் அசட்டை செய்வோமாஞல் இன்னொரு பிரிவினைக்கு வழி செய்தவராவோம்.''

''ஆரியர், திராவிடர் பிரிவினை கொடும் பூதம்போல் அடிக்கடி தலை தூக்குகிறது இத்தகைய பிளவு சகதிகளை வெறுமனே அலட்சியம் செய்வது சரியல்ல; ஆ ரி ய திராவிட பிரச்சனை குறித்து ஆராய்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும் '' மேலே தரப்பட்டிரும்பவை கவர்னர் பிரகாசா மாணவர்களுக்கு முன்னுல் பேசிய வாசகங்கள் !

'ஆரிய திராவிட பிரச்சனை அர்த்தமற்றது என்று ஒதுக்கி விடக்கூடாது !'

'அப்படி அலட்சியப்படுத்துவது இன்னொரு பிரிவினைக்கு வழி கோலும் !'

முஸ்லீம் லீகின் செல்வாக்கு ஆரம்ப காலத்தில் குறைத்து மதிப்பிடப்பட்டது–சுப்பிரமணியம் போன்றவர்களால் !

அதன் விளைவு — பாகிஸ்தான் பிரிவினை! கவர்னர் கூற்றுப்படி 'சோகக்கதை'!

இந்த அச்சம்தான் அவரை இப்படி யெல்லாம் பேச வைத்திருக்கிறது! 'பிரச்சனையை புரிந்து கொள்ள விரும்பவில்லை' என்று திமிர் வாதம் பேசி தோல்வியைத் தழுவிக் கொள்ளாதீர் என்று எச்சரித்திருக்கிருர்.

அ ல ட் சி ய ப் படுத்தப்பட்ட பா கி ஸ் தா ன் பிரச்னையைப் போலவே—

இன்று தேசீய வட்டாரத்தின் பெரிய புள்ளிகளிலிருந்து சுப்பிரமணியம் போன்றவர்கள் வரை அலட்சியப் படுத்தப்பட்டு வரும் திராவிடநாடு பிரச்னையும் பாகிஸ்தாஞகி விடுமோ என்ற பயம் கவர்னரை குழப்பி விட்டிருக்கிறது.

அவர் உணருகிருர் 'திராவிடஸ்தான்' 'பாகிஸ்தாஞக' மாறி விடும் என்று !

அதன் விளைவாகத்தான் அவருக்கு இந்த நடுக்கம் ஏற்பட்டிருககிறது !

கொ டு ம் பூதம்போல தலை காட்டுகிறதாம் ஆரிய திராவிட வேற்றுமை!

நம் சக்தியை அவ்வளவு பயங்கரமாக உருவகப் படுத்திப் பார்க்கிருர் கவர்னர்.

இன்னொரு பிரிவினைக்கு வழி கோலுமே என்கிருர்; அதாவது 'திராவிடநாடு' தனியாகப் பிரிந்து விடுமே என்று பெருமூச்சு விடுகிருர்!

அவருக்கு அந்தப்பயம் இருக்கிறது! அதஞல்தான் செருக்கு மொழி பேசும் சீலர்களுக்கு எச்சரிக்கிருர்—அலட்சியமாக இருந்து விடாதீர்கள் 'அந்த' சக்தி வேகமாக வளர்ந்துகொண்டு இருக்கிறது — என்று முன் அறிவிப்பு செய்கிருர், பிரகாசா!

★

ஆரிய திராவிட வேற்றுமைககு ஆராய்ச்சி வேண்டுமாம்! ஆரிய திராவிட வேற்றுமைக்கே

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

"தீச்சுடர்"

"தீச்சுடர்" மே திங்கள் மூன்றும் நாள் வியாழக் கிழமையிலிருந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் முடியும் நிலையிலிருக்கிறது. ஏ ஜெ ண் டு நிபந்தனைத் தாள்களைக் கேட்டு எழுதியிருக்கும் தோழர்களுக்கு ஏப்ரல் 16ம் தேதி பாரங்களை அனுப்பி வைக்கப்படும். அதில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கிறது. அதன்படி பூர்த்தி செய்து டிபாசிட் தொகையைக் கீழ்க்காணும் அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேம்.

சி. பி. சிற்றரசு,
ஆசிரியர்,
'தீச்சுடர்'
31, தையப்பமுதலி தெரு, சென்னை-1

பேனோவியம்

‘ஸ்ரீ 420’ கதாநாயகனல்ல ! மே. த. கவர்னர்பிரான் !

காணக் கண் கோடி வேண்டும்; கிண்டி ராஜ பவனத்தில் மே. த. கவர்னர் பிரான் கொலு வீற்றிருப்பது அப்படியிருக்குமாம் !

காவலிருக்கும் சிப்பாய்களென்ன : ஏவல் புரியப் பணியாளரென்ன; அப்பப்பா ! அதிசயமான காட்சியாம் !

ஆமாம்; அதிசயம்தான் ! ஏழை இந்தியாவில் அது ஒரு அதிசயம்தான் !

மானத்தை மறைக்க ஒரு முழம் துணி இல்லையே என்று மறக்குடியில் வந்தோர் மரக்கிளைகளிலே பிணமாக ஊஞ்சலாடுகின்றனர் !

சிரங்கு பிடித்த மேனியும், பேன் மேயும் தலையும் கொண்டு ஊன் மறந்து வாடுகின்றனர், மானே! தேனே! என்ற வர்ணனைக் குரிய பாரத மாதாவின் புத்திரர்கள் !

வாழ்ந்து கெட்டவர்கள்—

வாழ்க்கையின் ரசனையையே உணராதவர்கள்—

கவிழ்ந்த தோணியிலிருந்து தப்பி, வாய் பிளந்து நிற்கும் திமிங்கலத்தின் பிடியிலே சிக்கியதைப் போல வெள்ளையன் துரைத்தனத்திலிருந்து தப்பினோம் ! தப்பினோம்!! என்று துந்துபி முழக்கியவர்கள், தேசியப் படுகுழியிலே விழுந்து தவிக்கிறார்கள்!

வீடில்லை; வீடிருந்தால் அதில் செல்வமில்லை !

அடுப்பு இருக்கும்; அதிலே பூனை தூங்கும் !

—பரதேசிக் கோலம் தாண்டவமாடும் இந்தப் புண்ணிய பாரத மண்ணிலே தான் பத்து லட்சம் வாங்கும் பெம்மான் பிரகாசா வாழ்கிறார் !

அவர்தான் கமண்டலமேந்தி— கட்டுச் சோறு மூட்டையைக் கம்பிலே மாட்டிக்கொண்டு ‘ஸ்ரீ 420’ படத்துக் கதாநாயகன் நிலையிலே காசிக்குப் பயணமாவதைப்போல நடித்தாராம்!

மாறுவேஷப் போட்டி—அதிலே இது ஒரு பிரத்யேகக் காட்சி! இதற்கு முதற் பரிசுகூட கிடைத்திருக்கிறது!

காசிப் பிராமணர்கள் கருவாடும் தின்பார்கள்!

இந்தக் காசி பிராமணர் கையிலேந்தியிருக்கும் மூட்டையிலேயுள்ள கட்டுச் சோறு பசு நெய்யிலே செய்த ருசிமிக்க உணவென்று கருதுகிறீர்கள் ?

இல்லை; இல்லை! தென்னகத்து மாந்தரின் எலும்புகளை முறித்து வைத்து, அதை உறிஞ்சி மகிழ்வதற்காக எடுத்துச் செல்கிறார் !

வரி; வரி என்று நம் முதுகிலே கொள்ளிக் கட்டையால் வரி போட்டு, வாரிச் செல்லும் செல்வம் பத்து லட்சம் அந்தப் பிராமணரின் தோளிலே ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது !

கையிலே கமண்டலமாம்! அதிலே பொறி வழங்கும் கண்களோடு ஏழைத் தமிழன் பிழிந்துகொடுத்த இரத்தம் பாதுகாக்கப் பட்டிருக்கிறது!

காசிக்குச் செல்கிறாரே, இந்த யாத்ரீகர், யாரைச் சேவிக்க ?

விசுவநாதன் சிலையையா ? இல்லை; இல்லை. நம்மீது விசுவாசம் பாராட்டுவதாக நடித்துக் கொண்டு, கொசுப்போல நம்மை நசுக்கி விடக் காத்திருக்கும் பண்டித நேருவின் வடநாட்டு ஆதிபத்ய பீடம்தான் அவர் வணங்கும் விசுவநாதர்!

★

கொத்தலவாலைக் கட்சியைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, இலங்கை பொதுத் தேர்தலில் வெற்றிமாலை சூடியிருக்கும் பண்டார நாயகா இவர்தான்! இங்கிலாந்தின் பிரதமர் ஆண்டனி ஈடனோடு — ஆக்ஸ்போர்டு கலாசாலையில் பயின்றவர். இலங்கையை விரைவில் குடியரசாகப் பிரகடனப் படுத்தப் போகிறது, இவரது ஆட்சிபீடம் !

★

விரயம்! விரயம்! ?

★

செல்லாக் காசுகள் !

அலங்காரப் பதுமைகள் !

—இப்படி பல பெயர்களைச் சூட்டலாம், தேசிய அரசாங்கம் ‘உதவி மந்திரி’கள் என்னும் பெயரிலே ஏராளமான செல்வத்தை விரயம் செய்யும் விவேகமற்ற போக்கிற்கு !

பெரும்பான்மையான உதவி அமைச்சர்களுக்கு எந்தவித வேலையும் கிடையாதாம் !

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதிலும் அவர்கள் கலக்கப்படுவதில்லையாம் !

வெளிவிவகார இலாக்காவிலே உதவி மந்திரியாயிருக்கும் கையத் அகமது. தான் வேலையில்லாதிருப்பதை கீழ் உத்யோகஸ்தர்கள் கேலி செய்வார்களென்பதற்காக முதன் மந்திரி இல்லாத நேரங்களிலெல்லாம் சுற்றுப்பயணத்துக்குக் கிளம்பிடுகிறாராம் !

“அப்படி இருந்தும் நீங்கள் ஏன் பதவியை ராஜிநாமா செய்யாமலிருக்கிறீர்கள்? ” என்று கேட்கப் பட்டபோது, ஒரு உதவி மந்திரி பதில் சொன்னாராம்—

“என்ன செய்வது; மாதம் 1750 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது: இனாமாக வீடு; போக்குவரத்து வசதிகள்—இப்படிக் கிடைக்கின்றன, இதை எவ்வாறு தியாகம் செய்ய முடியும்?”—என்று.

—இப்படி எழுதுகிறது, ‘கரண்ட்’ ஏடு. எப்படி இருக்கிறது பார்த்தீர்களா பாரத வீரர்களின் துரைத்தனம்?

மேன்மை தங்கிய கவர்னர் துரையே! உண்மையிலேயே நீங்கள் கட்டுச்சோற்றுடன், காசிக்குத் (திரு. பிரகாசாவின் சொந்த ஊரும் காசிதான்!) திரும்பிச் செல்ல வேண்டிய நேரம் வரத்தான் போகிறது !

திருடர்களுக்கு இனி இடமில்லை எனத் திட்ட வட்டமாக அறிவித்து விட்டது திராவிட முன்னேற்றக் கழகம் !

கொள்ளை போகும் செல்வம் பத்து லட்சத்தை மீட்பதற்கான போருக்குத் துணை புரியத் தயார் என அறிவித்து விட்டது, சோஷலிஸ்ட் கட்சி !

ஆமாம்; கவர்னரே! ‘ஸ்ரீ 420’ கதாநாயகன் நிலையிலே வடநாட்டு ஏகாதிபத்யத்துக் கங்காணிகள் யாவரும் காசிக்குத் திரும்பிச் செல்ல வேண்டிய தருணம் அதிக தூரத்திலில்லை!

சட்டசபை மாறுவேஷப் போட்டி அதற்கெல்லாம் ஏற்றதொரு ஒத்திகையாக இருக்கட்டும் !

ஊசிப் போன துரைத்தனத்தால் பாசி பிடித்த குட்டை போல் ஆக்கப்பட்டிருக்கும் தென்னகம் விழித்தெழுந்தால் ஆக்ரமிப்புக்காரர்கள் வேறென்ன செய்ய முடியும்? காசிக்குத்தானே செல்ல வேண்டும்! உங்கள் வேஷம் இந்தப் பழமொழியைப் பறைசாற்றட்டும் !

★

உதிர்ந்த சருகு.....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

புழுப் போல் நெளியும் உன் இடையைப் பொடி செய்து விடுகிறேன்! பாவி!—என்று பாய்ந்து சென்று அவள் கழுத்தை நெறித்து ஒடித்திருப்பான், அவள் கணவன் மட்டும் அங்கு இல்லாவிடில்!

இரண்டு ஆண்டுகள் என்ன; இரண்டு யுகங்கள் வேண்டுமானாலும் காத்திருப்பேன் என்று கதையளந்தவள் வேறொருவன் காதலியாகிவிட்டாள்! குதிரை கீழே தள்ளியதுமல்லாமல், மண்ணையும் வாரி மூடியதுபோல என்று பழமொழி சொல்வார்கள்; அதைப் போலத்தானே லீலாவும் சவுந்தரைக் கைவிட்டது மல்லாமல், அவன் கருவிழிகள் குருடாகட்டும் என்று கணவனையும் அழைத்து வந்து தரிசனம் காட்டுகிறாள்!

...மன்னிக்க முடியாத குற்றம்! மறக்க முடியாத சம்பவம்!!

''ஏன் சவுந்தர்; மௌனமாக இருக்கிறீர்கள்? உங்கள் வேலைகளைக் கெடுத்து விட்டேனா?''

—லீலாதான் கேட்டாள், அவன் வேலையை மட்டுமா கெடுத்தாள்; வாழ்வையே கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டாளே!

''ஒன்றுமில்லை லீலா! எனக்கு ஞாபகசக்தி அதிகம். எனவே தான் முடிவடையாத என் ஆராய்ச்சிகளைப் பற்றி மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கிறேன்.''

''பரவாயில்லை; எங்கே எனக்குக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள் பார்ப்போம்! ரொம்பவும் களைப்பாக இருக்கிறது!''

—தண்ணீர் கேட்கிறாள் ஆசைத் தருவின் ஆணி வேரில் வெண்ணீர் பெய்து விட்டு!

''இதோ கொண்டு வருகிறேன்!'' என்று வெறும் சம்பிரதாயச் சிரிப்பொன்றை இதழ்களிலே தவழ விட்டு உள்ளே சென்றான்!

அதோ அந்தக் கடிகாரம்; கண் நிறைந்த காதலியைக் கட்டிப் பிடிக்கத் தாவிவரும் பெரிய முள்! அதன் இடையிலே, உங்களை ஒன்றுசேர விடமாட்டேன் என்று உறுமிக் கொண்டிருக்கும் நிமிஷ முள் அப்போது சின்ன முள்ளோடு இணைந்திருந்தது—பெரிய முள்ளை எள்ளி நகையாடியபடி!

கடிகாரம் ஓட வில்லை நின்றிருந்தது. சாவி கொடுத்து எத்தனை நாட்களாகின்றன!

ஆமாம்; இப்போது நடந்திருப்பதும் அதுதான்!

'சின்ன முள்' நிமிஷ முள்ளை உரிமையாக்கிக் கொண்டு, கூடத்திலே கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கிறது!

அவர்களின் தாகத்தைத் தணிக்கத் தண்ணீர் கொண்டு வர 'பெரிய முள்' காத்திருக்கிறது!

—இந்த அக்ரமத்தை மாற்றியமைக்க முடியாதா?

ஏன் முடியாது? கடிகாரத்தையே சுக்கு நூறாக உடைத்தெறிந்தால்?

அவனை விட்டுப் பிரிந்த சிட்டுக் குருவியின் சிறகை வெட்டி எறிந்தால்!

— உள்ளத்தைப் போர்க் களமாக்கிக் கொண்டு கடைக் கண்ணால் மேஜையைப் பார்த்தான்!

அந்த சீசா! ஜீவ சக்தி குறையாமல் கொழுத்துப் போயிருக்கும் கண்ணுக்குத் தெரியாத டைபாய்டு கிருமிகள் உயிரோடுஉலவிக் கொண்டிருக்கும் அந்த சீசா...

வெறும் கண்ணாடிப் புட்டியா அது? இல்லை; இல்லை! நாசத்தின் கருப்பை! மரணத்தின் திறவுகோல்!

சவுந்தர் அவசர அவசரமாகத் அந்தக் கிருமிகளைத் தண்ணிருக்கு மாற்றினான்! மின்னல் வேகத்தில் இந்த வேலைகள் முடிந்தன!

''லீலா! பானைத் தண்ணீர் உனக்குப் பிடிக்குமென்பதற்காக பேராசிரியர் அறையிலிருந்து கொண்டு வந்தேன் இந்தா!...''

—மடமடவெனப் பருகினாள், பிறகு துள்ளு மான் வேகத்தில் மயானத்திற்கு ஓட வேண்டுமே என்ற உண்மை தெரியாமல்!

பிறகு அதிக நேரம் அங்கே தங்கவில்லை; போய் விட்டாள்!

''ஆமாம்; போய் விட்டாள். பூவோடும், குங்குமத்தோடும் மகராசி போய் விட்டாள்!'' ஆயாசப் பட்டனர் பலர்!

,,என்ன காய்ச்சலோ தெரியவில்லை! பொழுது விடிவதற்குள் பிணமாக்கி விட்டதே!''— ஆச்சரியப்பட்டனர் சிலர்!

''என்னை ஏய்த்து விட்டேன்—எய்த்து விட்டேன்—என்று சேவலைப் போல் தலை தூக்கித் திரிந்தவளை நசுக்கி விட்டேன்! நசுக்கி விட்டேன்! வெற்றி! வெற்றி!'' சப்தம் போட்டான்!

''கூச்சல் போடாதே சவுந்தர்! உன் ஆராய்ச்சிக்காக வளர்க்கப் பட்ட டைபாய்டுக் கிருமிகளை நீயே தவறிப்போய் சாப்பிட்டிருக்கிறாய்; இப்படிப் புலம்புவது ஆபத்து!''—டாக்டர்கள் வெற்றி போதையிலே லயித்திருக்கும் சவுந்தரைப் பார்த்துக் கூறினார்கள்;

''நான் தவறிப்போய் சாப்பிடவில்லை டாக்டர்; வேண்டுமென்றேதான் சாப்பிட்டேன்; வேண்டுமென்றேதான் அதை லீலாவுக்கும் கொடுத்தேன்!''

—சவுந்தர் புலம்பினான்!

''பாவம்! சித்தபேதம் வேறு சேர்ந்திருக்கிறது!''—ஒரு டாக்டர் இப்படிக் கூறிக் கொண்டே உதட்டைப் பிதுக்கினார்!

கிளையிலிருந்து உதிர்ந்த சருகு காற்றிலே ஊஞ்சலாடியபடியே கீழே விழுவதைப் போல, கொஞ்சம் கொஞ்சமாக அவன் உயிர் பிரிந்து கொண்டிருந்தது!

—மாறன்

சிலப்பு நாடக மன்றத்தின்
சிந்தனை நாடகம்
அறிஞர் அண்ணா அவர்கள்
தலைமையில்,
பன்மொழிப் புலவர்
அறிஞர்,
கா. அப்பாதுரையின்
அழகோவியம்!

'காற்றும்--
--மழையும்'

வசனம்:
இரா. மணிவேந்தன்
பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

22-4-56 ஞாயிறு மாலை
6-30 மணிக்கு

சென்னை ஒற்றைவாடை
தியேட்டரில்

கவிஞர் கண்ணதாசன், வளையாபதி முத்துகிருஷ்ணன், எஸ். எஸ். பி. லிங்கம், கே. எம். கண்ணபிரான், வனிதா, காந்தா, மல்லிகா ஆகியோர் நடிக்கின்றனர்.

கட்டணம்: ரூ. 3, 2, 1, 0-8-0

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம்:
19. அருணாசல ஆச்சாரி தெரு, சேப்பாக்கம்.

என். கிருட்டினன், (செயலாளர்)

பூ வண்ணம் மயங்குது...

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

ஆராய்ச்சிதான் காரணம் என்பதை மறந்து விட்டு பேசியிருக்கிறார் பிரகாசா!

கவர்னர் விடும் கண்ணீருக்காகவோ, பிரச்சனை இன்னும் கோவைக் கோமானுக்குப் புரியவில்லையே யென்பதற்காகவோ—விடுதலை முரசம் தூங்கிக் கொண்டிருக்காது! கேளாக் காதினர் செவிப்பறை கிழிகின்ற அளவிற்கு பிரிவினைக் கீதம் ஒலித்துக் கொண்டுதான் இருக்கப் போகிறது.

அவருக்கு 'ஆபத்தாகத்' தெரிகின்ற அந்தப் பிரிவினைதான்—

நமக்கு அமுதமாக இனிக்கிறது!

என்றாலும் ஏகாதிபத்திய வாதிகள் திராவிடத்தை என்றுமே கூண்டுக் கிளியாக்கிவிட நினைக்கிறார்கள்!

அந்த ஆதிக்க ஆசையின் விளைவுதான் 'தேசியம்' 'ஏக இந்தியா', 'ஒரே நாடு' என்ற மயக்கு மொழிகள்!

நாயகமோ அந்த மயக்கு மொழிகளைத் தவிடு பொடியாக்கி நெடு நாளாயிற்று!

வீரத்தின் திருவுருவம் இனி மேலும் 'தேசிய' வலையில் சிக்கித் தவிக்காது!

★

அமெரிக்காவிலே 'பீ-மார்டின்' என்ற பெயர் கொண்ட ஒரு பறவைக் கூட்டம்—நய வஞ்சகம் கொண்டவைகளாம்! கண்ணைப் பறிக்கும் வண்ணம் கொண்ட அப்பறவைகள், எழில் மிக்கவைகளாம்; அன்றலர்ந்த ரோஜா போல அழகுமிக்க கொண்டைகளைப் பெற்றிருக்கும் அந்தப் பறவைகள் கிளைகளுக்கிடையே இலைகளோடு இலைகளாய், வான வீதியின் வர்ணஜாலங் கொண்ட கொண்டைகளை வைத்தபடியே கீதமிசைக்குமாம்! மலர் நாடி அலையும் வண்டுகள், அந்தப் பறவைகளின் கொண்டையையும் மலரென்றெண்ணி அதிலே வந்து உட்காருமாம்; 'வலை' வீசிக் காத்துக் கொண்டிருந்த அந்த நயவஞ்சகப் பறவைகள் உடனே கொண்டையை மடக்கி அந்த வண்டுகளை விழுங்கி பசி தீர்த்துக் கொள்ளுமாம்!

அந்தப் பறவைகளின் பண்பு கொண்ட வடநாட்டு மனிதர்கள் திராவிடத்தை எப்படியும் தமது உடைமையாக்கிக் கொள்ள நினைக்கிறார்கள்.

பசி தீர்த்துக் கொள்ள 'பீ-மார்டினுக்கு' வண்ணக் கொண்டை அங்கே பயன்படுகிறது!

இந்த வடநாட்டு மனிதர்களோ தங்கள் ஏகாதிபத்தியப் பசியைத் தீர்த்துக் கொள்ள 'தேசியம்' எனும் கொண்டையை 'ஏக இந்தியா' என்ற கிளைகளிலே மறைத்து வைத்துக் கொண்டு திராவிடத்தை என்றென்றும் அடிமை பூமியாக்கி விட மனப்பால் குடிக்கிறார்கள்.

இங்கிருக்கும் சுப்ரமணியம் போன்றவர்களோ: அந்த 'மாயக் கொண்டையின்' வர்ண ஜாலத்திலே மதி மயங்கி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வடநாட்டு மனிதர்கள் இங்கே 'பீ மார்டின்' வடிவிலே உலவிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் கூறி வரும் உண்மையை செருக்கு மொழி பேசிக் கொண்டிருக்கும் சுப்பிரமணியம் போன்றவர்கள் புரிந்து கொள்ளும் நாள், அதோ விரைவில் வந்து கொண்டிருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறோம்.

—வில்வம்

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

அப்போது ''யார் இங்கே சின்னப்பன்?...'' என்ற குரல் கேட்டது, வாசலில்!

எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். தபால்காரன் நின்று கொண்டிருந்தான்!

''ஏன்; நான்தான்!'' என்றான் சின்னப்பன்.

'ஐந்து ரூபாய் மணியார்டர்!''—என்றான் அவன்.

சின்னப்பன் ஓடினான். சற்று நேரத்திலே பணம் அவன் கைக்குக் கிட்டியது. அம்மா மருந்து வாங்க ஓடினாள். அப்பாவும் பிழைத்தார்.

★

ஆயிரம் ரூபாய்க்குக் காத்திருந்த சின்னப்பனுக்கு ஐந்து ரூபாய் எப்படிக் கிடைத்தது? அதன் மர்மம் சின்னப்பனுக்கே தெரியாது!

குறுக்கெழுத்துப் போட்டிக்குப் பணம் அனுப்பியபோது, 'மணியார்டர் தாளில்' அவசரத்தில் விலாசத்தை மாற்றி எழுதி விட்டான் சின்னப்பன். வேடிக்கைதான்; அவன் அனுப்பிய பணம் அவனுக்கே திரும்ப வந்துவிட்டது!

★

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு முறை தினசரி ஒன்றைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது சின்னப்பனுக்கு! அதில் குறுக்கெழுத்துப் போட்டியின் விடையும், பரிசு பெற்றவர்களின் விபரமும் வெளி வந்திருந்தது. சின்னப்பன் படித்தான்!

அவன் எழுதியிருந்த விடை அத்தனையும் எழுத்துக்கு எழுத்து தப்பு!

அதைவிட ஆச்சரியமான செய்தி ....அந்தப் போட்டியில் சரியான விடை அனுப்பியோர் **ஆயிரம்** *பேராம்! பரிசுத் தொகை பங்கிடப் பட்டு ஒவ்வொருவருக்கும்* **ஒரு** *ரூபாய் அனுப்பப் பட்டதாம்!*

★

இப்போதெல்லாம் சின்னப்பன், ''இந்தக் குறுக்கெழுத்துப் போட்டியை எல்லாம் ஒழித்துக் கட்டணுப்பா'' என்று அவனது அப்பாவிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறான்.

★

★ ★ ★ பிறைவானம் ★ ★ ★

"1000 ரூபாய்! அப்பப்பா! ......1000 ரூபாய்! அப்படியே எனக்குக் கிடைத்து விட்டால்...? அப்புறமென்ன? நான் சாதாரண செம்படவச் சிறுவனா? கேவலம், கேவலம்! சீமான் சின்னப்பன்! ஓலைக் குடிசையும், ஓட்டை உடைகளுமா என்னிடம் இருக்கும்? ...ம்... அப்பாவின் மீன் வலையை கடலில் வீசி எறிவேன்; கட்டு மரம் அடுப்புக்கு விறகாகும்! ஏ, சின்னப்பா!... என்னப்பா தயக்கம்! உருண்டு வருதப்பா ஆயிரம் ரூபாய்!... ஹா...ஹா..."

நடுத்தெரு என்றும் பாராமல், தனக்குத்தானே வாய்விட்டுப்பேசிய படியே வேக நடை போட்டுக் கொண்டு வந்தான் செம்படவச் சிறுவன் சின்னப்பன்!

அவனது கால்கள் கடற்கரையோர குடிசையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தன. ஆனால், மனமோ ...'அந்த ஆயிரம் ரூபாய்களைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. எங்கேயோ காண முடியாத இடத்திலே— 'கற்பனைப் பெட்டி' யிலே முடங்கிக்கிடந்த அந்த ஆயிரம் ரூபாய்களைக் காட்டி—"அதோ,பார்! அத்தனையும் உனக்கே!" என்று ஆசை காட்டிக் கொண்டிருந்தது. அவனது பேராசை சூழ்ந்துவிட்ட பொல்லாத மனம்!

அப்பாவோ, அன்றாடம் கஞ்சிக்கே அலைகடலில் பிரயாணம் செய்ய வேண்டிய பரம ஏழை — அவர் பெற்ற செல்வமோ, பணம் கட்ட வழியின்றி பள்ளிக்கு முழுக்குப் போட்டவன்—அவனுக்கு எப்படி கிடைக்கப் போகிறது ஆயிரம் ரூபாய்?

அதோ, அவன் சொல்லுகிறான், கேளுங்கள்:

"எப்படி கிடைக்கப் போகிறதா? எங்கிருந்தோ வந்த சந்தர்ப்பம், என் 'அதிர்ஷ்டம்'— இவைதான் தரப் போகின்றன. இல்லாவிடில் பட்டாணிக் கடலை வாங்க நான் கடைக்குப் போவானேன்? கடைக்காரன் கடலையைக் காகிதத்தில் மடித்துக் கொடுப்பானேன்? கசக்கி எறிந்த அந்தக் காகிதத்தை, நான் மீண்டும் எடுப்பானேன்? படிப்பானேன்? அதிலே '**குறுக்கு எழுத்துப் போட்டியின் சரித்திரத்திலேயே புதிய அத்தியாயம்! முதல் பரிசு ரூ. 1000!**' என்ற கொட்டை எழுத்துக்கள் என் கண்களிலே தென்படுவானேன்? ஒரு கேள்விக்கு எத்தனைக் கேள்விகள் பார்த்தீர்களா? இவற்றுக் கெல்லாம் ஒரே விடை— அடுத்த வாரத்தில் என் கையில் ஆயிரம் ரூபாய்"...!

குடிசை நெருங்கி விட்டது. வாசலில் உட்கார்ந்திருந்த அம்மாவைக் கண்டதும் அவன் ஏனோ திடுக்கிட்டான். சற்று நடுங்கினான்.

எங்கேப்பா போயிருந்தே?..." —அம்மா அன்போடு கேட்டாள்.

"தபாலாபீசுக்கு..." என்று 'சடக்' கென்று சொல்லி விட்டான் சின்னப்பன்.

"என்ன?..."

வியர்த்துக் கொட்டி விட்டது அவனுக்கு. "இல்லே, ஆமாம்!... தபாலாபீசுக்கு பக்கத்துத் திடலிலே பட்டம் விட்டுக்கிட்டிருந்தாங்கம்மா... —பார்த்துட்டு வந்தேன்!"—சமாளித்துக் கொண்டான் அவன்.

"சரி! சோறு வச்சிருக்கேன்— சாப்பிடு, போ!" என்றாள் அம்மா.

சின்னப்பன் 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று உள்ளே ஓடினான். குடிசைக்குள் நுழைந்ததும் அவன் கண்கள் முதன் முதலாக அடுக்களையைக் கவனித்தன. அங்கே மூலையில் அடுக்கி வைக்கப் பட்டிருந்த பானைகளில் மாற்றம் காணப் படவில்லை. அவனுக்குத் தெம்பு வந்தது. சாப்பிட உட்கார்ந்தான். ஆனாலும் அவன் மனம் ஒரு நிலையில் இல்லை. அடிக்கொருமுறை அடுக்குப் பானையைப் பார்த்துக் கொண்டான். செய்யத் தகாத பெரும் குற்றம் ஒன்றைச் செய்து விட்டவனைப் போலத் தடுமாறினான். அம்மாவின் முகத்தைப் பார்த்த நேரமெல்லாம் நடுங்கினான். பாசமுள்ள அம்மா—ஆசை பொங்கும் அன்பு நெஞ்சம் அவளுடையது—ஆனாலும் சின்னப்பன் அஞ்சுவானேன்?

அவனது குற்றம்புரிந்தநெஞ்சு அதற்கும் பதில் சொல்லுகிறது, கேளுங்கள்:

"நடுங்காமல் என்ன செய்வது? நான் செய்த குற்றம் சாதாரணமானதா? ஆயிரம் ரூபாய்க்குக் காத்திருப்பதைக் குற்றம் என்று சொல்லவில்லை. அந்தப் பலனை அறுவடை செய்ய நான் தூவியிருக்கும் விதை...தகாத வழியிலே நான் சேர்த்த விதையல்லவா!

"பரிசுப்போட்டியில் விடுபட்ட எழுத்துக்களை பூர்த்தி செய்தேன். கருப்பும் வெள்ளையும் கலந்த அந்தத் துண்டுக் காகிதத்தில் நான் எழுதியது பத்தே எழுத்துக்கள்தான்! அதற்கு ஆயிரம் ரூபாய்! நான் வியந்தேன்! அப்புறம்தான் படித்தேன், போட்டியில் கலந்துகொள்ள பிரவேசக் கட்டணம் ரூபாய் ஐந்து செலுத்த வேண்டுமென்று! நான் என்ன செய்வேன்? ஐந்து—ஆயிரம்! இரண்டுக்குமிடையே எவ்வளவு வித்தியாசம்! ஆனால் நான் பணத்திற்கு எங்கே போவது?

"இன்றுதான் போட்டியின் முடிவு தினம். தவறினால் அந்த ஆயிரம் ரூபாய் வேறு எவருக்கேனும் கிடைத்துவிடும். நான் என்ன செய்வேன்? அந்த நேரத்தில், அடுக்களையிலிருந்த ஒரு பானையில்—அது தான் அம்மாவின் 'இரும்புப் பெட்டி' —பழம் துணி ஒன்றில் அம்மா ஐந்து ரூபாய் முடிந்து வைத்திருப்பது நினைவுக்கு வந்தது. அதுதான் அவளது ஆஸ்தி—பல நாள் உழைப்பின் பலன்! நான் யோசித்தேன். முடிவொன்றும் செய்தேன்....அதன் விளைவுதான் இப்போது நடுங்குகிறேன்..."

★

மாலை வந்தது!

கடலில் சென்ற செம்படவர்கள் அனைவரும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் சின்னப்பனின் அப்பாவை மட்டும் காணோம்! அம்மா வாசலில் நின்று நின்று பார்த்தாள்; பலனில்லை.

வழக்கத்திற்கு மாறாக அன்று கடலில் வேகமாக காற்று வீசிக் கொண்டிருந்தது. சின்னப்பனுக்கும் ஒன்றும் புரியவில்லை. அம்மா மற்றவர்களிடம் விசாரித்தாள்.

"இன்னும் வரவில்லையா அவன்? கடலில் இன்று காற்று மிகவும் அதிகமாக இருந்தது. நாங்கள் பயந்தோம். படகுகள் கவிழ்ந்து விடுமோஎன அஞ்சி வேகமாகத் திரும்பி விட்டோம். அவனும் பின்னால் தானே வந்து கொண்டு இருந்தான்! ஏன் இன்னும் திரும்பவில்லை?..." — இப்படி கேள்வியுடன் பதில் கிடைத்தது.

அம்மா பதறி விட்டாள். இருள் கவிந்து கொண்டு வந்தது. காற்று இன்னும் வலுத்தது. மழை வேறு பெய்ய ஆரம்பித்து விட்டது. அம்மா கையைப் பிசைந்தபடி கண்ணீர் விட்டுக் கொண்டு நின்றாள்.

நன்றாக இருட்டிவிட்டது! சின்னப்பன் ஓடினான். தந்தையைக் காணாது தவித்தது அவன் நெஞ்சம். பாவம், கடல் நீரிலே காலெத்து வைத்தான்; நடந்தான்; நடந்து கொண்டேயிருந்தான். பாறை ஒன்று தென்பட்டது. அதிலே ஏறி நின்றான். "அப்பா! அப்பா!" என்று கத்தினான்.

மழையும் புயலும் இன்னும் அதிகமாகியது!

"அப்பா! அப்பா!" என்று எழும்பிக் கொண்டிருந்தது, சின்னப்பனின் அழுகுரல்! அலை ஓசை— மழை யோசை — காற்றோசை — இவைகளுக்கு மத்தியிலே அந்தச் சிறுவனின் அவலக் குரல் எங்கே எழும்பப் போகிறது? ஆனாலும் அவன் கத்திக் கொண்டுதான் இருந்தான். இரவு முழுதும் அவனது கதறல் ஓயவேயில்லை!

★

நன்றாகப் பொழுது விடிந்து விட்டது. கரையிலே கலங்கிய கண்களுடன் அம்மா நிற்க, பாறையிலேயே 'கோ'வென்று அழுதபடி உட்கார்ந்து கொண்டிருந்தான் சின்னப்பன்!

அப்போது....

கடலிலே ஏதோ ஒரு உருவம்— கையையும் காலையும் அடித்துக் கொண்டு வருவது அவனது கண்களில் தென்பட்டது. நன்றாககவனித்தான் அவன். நீந்துவதற்கு உடலிலே வலுவற்ற நிலையில், மரணத்தோடு போராடிக் கொண்டு வந்தது அந்த உருவம்!

சின்னப்பன் கூர்ந்து கவனித்தான். மறுகணம் "அப்பா!" என்று அலறினான்.

ஆமாம்; அந்த உருவம் அவனது அப்பாவினுடையதுதான்! கட்டுமரம் கவிழ்ந்துவிட, நடுக்கடலிலேயிருந்து நீந்தி வருகிறார் போலும் அவர்! சின்னப்பன் மறுபடியும் கத்தினான். மரணக் குரல் கொடுத்துக்கொண்டு அப்பாவும் அலறினார். நீந்திக் கொண்டே வந்தார். கைகள் சோர்ந்து விட்டன. எனினும் அவர் கரையை நெருங்கிக் கொண்டுதான் இருந்தார்.

சின்னப்பன், அம்மா— இருவரும் அலறித் துடிக்க, அப்பா கரைக்கு நெருங்கியபோது பிணத்தைப்போல உருண்டு வந்தார். வேண்டாத பொருளை வெறுத்து ஒதுக்குவதைப் போல, கடலலைகள் அவரை தள்ளிச் சென்றன.

★

அவசர அவசரமாக வந்த டாக்டர் அவரை பரிசோதித்தார். "மூச்சு இருக்கிறது. உடனடியாக மருத்துவம் செய்தால் உயிருக்குப் பயமில்லை; உடனே இந்த ஊசி மருந்தை வாங்கி வாருங்கள்!" என்று ஒரு துண்டுக் காகிதத்தில் எதையோ எழுதித் தந்தார் அவர்.

அம்மா அதை வாங்கிக் கொண்டாள். அவசர அவசரமாக அடுக்களைக்குச் சென்றாள்.

சின்னப்பன் திடுக்கிட்டான்!

அம்மா பானை ஒன்றில் கையை விட்டாள். மறுகணம் 'ஐயோ' என்று அலறினாள்.

அதைத் தொடர்ந்து சின்னப்பனின் 'ஆ' என்ற பெருமூச்சும் எழுந்தது!

"என்னம்மா? ஏன் அழுகிறாய்? இப்போது அப்படியேதும் பயமில்லை —இன்னும் சில வினாடிகளில் மருந்து வராவிட்டால், அப்புறம் நீ நிரந்தரமாக அழ வேண்டியதுதான்!" என்று அவசரப் படுத்தினார், டாக்டர்.

ஆனால், அவருக்கென்ன தெரியும், அம்மாவும் மகனும் எழுப்பிய அந்தக் கூக்குரலின் காரணம்?

"சின்னப்பா! எங்கேடா பணம்? நான் என்னடா செய்வேன்?"— அம்மா அழுதாள்.

சின்னப்பன் என்ன செய்வான்? மரண முகப்பிலே அப்பா—அவரைப் பிடித்து இழுக்க வேண்டுமானால் மருந்தும், மருந்துக்குப் பணமும் தேவை—ஆனால் அம்மாவின் ஆஸ்தியோ, களவாடப்பட்டு போட்டிக்கல்லவா அனுப்பப்பட்டுவிட்டது!

"சீக்கிரம்! சீக்கிரம்!..."—துரிதப் படுத்தினார் டாக்டர்!

"சின்னப்பா! அப்பா செத்துப் போயிடுவாராமேடா! நீ பார்த்தியா பணத்தை?" என்று மீண்டும் கேட்டாள் அம்மா!

சின்னப்பன் "அம்மா...." என்று விம்மிக் கொண்டே பேச ஆரம்பித்தான்.

தொடர்ச்சி 10-ம் பக்கம்—

கடைசிப் பக்கம்

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும்
தோழர்.
(★) கே. ரேங்கசாமி,
திருச்சி ரோடு.
கோவை.

கா. விசுவநாதன்;
வேடிச்சிப்பாளையம்.

(?) திராவிடநாடு பிரிந்தால் தி. க. தி. மு. க. ஒன்று சேருமா?

ஆமாம்; பிரிவினையில் ஒற்றுமை நிச்சயம் இருக்கும்.

(?) கிருஷ்ணமேனன் நேருவுக்கு என்ன உறவு?

தூது செல்லும் கிளியாகத்தான் அவர் வளர்க்கப்படுகிறார்.

சோலையன்; போள்ளாச்சி.

(?) 'இலாக்கா இல்லாத மந்திரி' என்றால் என்ன?

அலங்காரத்துக்கு மட்டுமே பயன்படும் குரோட்டன்ஸ் சேடி!

துரை. முருகேசன்; காரமடை.

(?) காமராசருக்கு நிழல் யார்?

அவரை விட அதிகக் கருப்பு உள்ளமும், குருட்டுப் பார்வையும் கோண்ட கக்கன்தான்!

பி. டி. ஜனார்தனன்;
திருவத்திபுரம்.

(?) ஆச்சாரியாருக்கும். காமராசருக்கும் உவமை கூற முடியுமா?

ஆச்சாரியார் வாலறுந்த நரி; காமராசர் ஊளையிடத் தெரியாத நரி அவ்வளவுதான் வித்தியாசம்!

பெ. வெ. அசலம்; கோவை.

(?) இராமராக நேருவையும். இலட்சுமணராக ஆச்சாரியாரையும், விபூஷணனாக சுப்பிரமணியத்தையும், அனுமாராக காமராசரையும், சுக்ரீவன் படைகளாக காங்கிரஸ் எம். எல். ஏ. க்களையும் நடிக்க வைத்து ஒரு சினிமா எடுத்து. அரசாங்கம் பிரச்சாரம் செய்தால்?

அப்போதும் இராவணன் போன்று நிமிர்ந்து நிற்கும் நம் கோள்கைகளை அவர்களால் அசைக்க முடியாது!

கன்னியப்பன்; நேல்வாய்.

(?) கடந்த காலத்தைப் பற்றி சிந்திப்பவர்கள் யார்?

மனிதருள் அசைபோடும் கூட்டம்

கோடிலிங்சம்; வேதாரண்யம்.

(?) காமராசரும், சுப்பிரமணியமும் உங்களால் அசைக்க முடியாத காண்டா மிருகங்கள்—வலிமையில்! என்கிறேன்!

அதனால்தான் டோலும் சேற்றிலே கிடந்து புரளுகிறார்கள்!

ப. மோகனவேல்; ராயபுரம்.

(?) விதவைகள் எந்த நாட்டில் அதிகம்?

அரசியல் விதவைகள் இப்போதைக்கு இலங்கையில் தான் அதிகம்! உதாரணம், முக்காடிட்டு முணகிக் கோண்டிருக்கும் கோத்தலவாலை.

கோமேதகவேல்; சீர்காழி.

(?) கட்சி மாறுவதால் யாருக்கு லாபம்?

தையற்காரருக்கும்; காதி வஸ்திராலயத்திற்கும்தான்!

சாரங்கன்; உத்தமபாளையம்.

(?) தேசிய அரசாங்க அலுவலகத்துக் குப்பைத் தொட்டியின் விசேஷம் என்ன?

பாராட்டிப் போற்றப்பட வேண்டிய போதமக்களின் உரிமைப் பட்டயங்களை சுமந்து கோண்டிருக்கும் 'பாக்யம்' அவைகளுக்குததானே கிடைத்திருக்கின்றன!

(★) கே ரேங்கசாமி; கோவை.

(?) 'தமிழ்நாடு' என்ற பெயர் உண்மையிலேயே இலக்கியத்தில் கிடையாதா?

கிடக்கிறார்கள்; கருத்துக் குருடர்கள்!

"இமிழ் கடல் வரைப்பில்
தமிழகம்"
—சிலப்பதிகாரம் 3–35)

"தென் தமிழ் நாடு செழுவியல்
கயல் புலி"
—சிலப்பதிகாரம் 25–171)

—இவைபோல் இன்னும் எத்தனையோ ஆதாரங்கள் உண்டு அந்த ஆராய்ச்சி உணர்வற்றோரின் வாயை அடைப்பதற்கு!

மணப்பாறை

13–4–56 வெள்ளி மாலை 6—மணிக்கு. பழைய சந்தைத் திடலில், தோழர் மா. இளங்கோன் அவர்கள தலைமையில், தோழர்கள் ஏ. வி. பி ஆசைத்தம்பி. அம்பில் தர்மலிங்கம், வடிவேலன், மணிமாறன்—ஆகியோர் பேசுவர்.

தூத்துக்குடி

15–4–56 ஞாயிறு மாலை 6—மணிக்கு. ஆரோக்கியபுரம் எஸ். எம். எஸ். மாளிகையில், வி. வி. டி. நினைவு ஆரம்பப் பள்ளி புது மனையை தோழர் மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைப்பார்கள். மாவட்டக் கல்வி இலாக்கா அதிகாரியின் தலைமையில், நகர மன்றத் தலைவர் தோழர் சாம் மாசிலாமணி, உபதலைவர் தோழர் சங்கர நாராயணன், தோழர்கள் பூ. ராசா, எம். எஸ் சிவசாமி—ஆகியோர் பேசுவர். [அன்று மாலை 5 மணிக்கு நகர சபையில் தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்பு அளிக்கப்படும்]

ஏலப்பாக்கம்

16–4–56 திங்கள் மாலை 6—மணிக்கு, தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா. தோழர்கள் கே. டி. எஸ். மணி. வி. டி. அண்ணாமலை—ஆகியோர் பேசுவர்.

சென்னை

16–4–56 திங்கள் மாலை 6—மணிக்கு. பெத்துநாய்க்கன் பேட்டை காசி விசுவநாதர் கோவில் திடலில், 'மக்கள் மன்ற' முதல் ஆண்டு விழாவில், தோழர் சி. எஸ். கணேசன் அவர்கள் தலைமையில், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், சி. ஆர். பாலசுந்தரம்—ஆகியோர் பேசுவர்.

அயன்புரம் (சென்னை)

17–4–56 செவ்வாயன்று மார்க்கெட் மைதானத்தில் நடைபெற இருக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்ததின விழாவில், தோழர் ந. வீரபத்திரன் அவர்கள் தலைமையில் தோழர் சி. பி சிற்றரசு, கவிஞர் சுரதா ஆகியோர் பேசுவர்.

அர்மயநாயகனூர்

17–4–56 செவ்வாய் மாலை 6 மணிக்கு நடைபெறும் தி. மு. கழக முதல் ஆண்டுவிழாக் கூட்டத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் வசனப்பித்தன் ஆகியோர் பேசுவா. இரவு "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற நாடகம் நடைபெறும்.

அய்யம்பேட்டை

17–4–56 மாலை ஆறு மணியளவில், அய்யம்பேட்டை மறுமலர்ச்சி மன்ற பொதுக் கூட்டம் காஞ்சி நகரசபைத் தலைவர் வி. என். பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெறும். அறிஞர் அண்ணா. சி. வி. எம். அணணாமலை, சி. வி. ராசகோபால் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

அடுத்த இதழில்

★

வெள்ளிக்கிழமை

மு. கருணாநிதி

எழுதும் தொடர்கதை

அழகான அச்சு வேலைகள்

★

★ குறித்த காலத்தில்

★ மனதுக்குகந்த வகையில்

நாங்கள்

செய்து தருகிறோம்!

★

தியாகி பிரஸ்,

38. மவுண்ட் ரோடு, சென்னை-6.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-8